'ed as a News Paper in Sri Lanka

# முஸ்லிம் காங்கிரஸ்
مسلم كنقرس
MUSLIM CONGRESS

Carnival®
ICE CREAM

'அல்லாஹ்வின் வேதமெனும், கயிற்றைப் பலமாகப் பற்றிப் பிடித்துக்கொள்ளுங்கள். பிரிந்து விடாதீர்கள்' -அல்குர்ஆன்

மலர் 5 ★ துல்ஹஜ்-முஹர்றம்-ஹிஜ்ரி 1410- ★ ஜூன்-ஜூலை 1990★ இதழ் 9 தொலைபேசி. 431711

# வடகிழக்கு முஸ்லிம்கள் ஒற்றுமைப்படும்நேரம் வந்துவிட்டது!

## தமிழர் குழுக்களின் போட்டியும் பொறாமையும் முஸ்லிம்களுக்கும் ஒரு பாடமாக அமையட்டும்!

### தவிசாளர் சேகு இஸ்ஸடீன்

வட-கிழக்கு மாகரணசபை கலைக்கப்பட்டுவிட்டது. புதிய தேர்தல்களுக்கான நடவடிக்கைகள் மும்முரப்படுத்தப்பட்டு வருகின்றன. இன்னும் சில மாதங்களில் தேர்தல்கள் நடைபெற்றால் அந்தச் சூழ்நிலையில் முஸ்லிம்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதை தூரப் பார்வையுடனும் தீர்க்கமாகவும் தீர்மானித்துக்கொள்ள வேண்டும்.

வட-கிழக்கு மாகாண சபை ஊடாக, தமிழர்களின் அரசியற் பிரச்சினைக்களுக்கான ஒரு தீர்வு முன்வைக்கப்பட்டது. இந்தியாவின் தலையீடு இந்த அதிகாரப் பரவலாக்க ஏற்பாட்டுக்கு வழி சமைத்தது. ஆயினும் வட-கிழக்கு மாகாணசபை எதிர்பார்த்த பலனைத் தரவில்லை. இதற்கு காரணங்கள் பல,

வட-கிழக்கு மாகாண சபையின் ஆட்சியிலிருந்த ஈபிஆர் எல்எவ் இந்தியாவினூடாக இலங்கையைப் பயமுறுத்தி அதிகாரங்களைப் பெற முயற்சித்தது, இலங்கை அரசாங்கம் மாகாண சபைகளுக்கான அதிகாரத்தை வழங்குவதில் நத்தை வேகத்தில் செயற்பட்டது. மாகாண சபை நிர்வாகத்தை நடாத்த விடாது புலிகள் இடைமறித்தன. புலிகளை அழிப்பதில் இந்தியா ஆர்வம் காட்டவில்லை. இந்தியாவுக்கு, வட-கிழக்கில் நிரந்தர அமைதி ஏற்படுவதில் உடன்பாடு இருக்கவில்லை.

தமிழர் பயங்கரவாத குழுக்கள் ஒற்றுமைப் படுவதையும் இந்தியா விரும்பவில்லை. இந்தியாவுக்கு அனுசரணையாக இல்லாத ஒரு தமிழ்ப் பயங்கரவாதக் குழு, வட-கிழக்கு மாகாணசபைஆட்சியில் அமர்வது இந்தியாவுக்கு லாபமாக இருக்காது. இந்தியப் படை வெளிவேறும் நிலை ராஜீவ் காந்தியின் தோல்வியினால் சாத்தியமானது. இந்தியப் படை வெளியேறியதும் வட கிழக்கில், மாகாண சபை ஈபிஆர்எல்எவ் அரசாங்கம் பொலிஸ் நிலையங்களைத் தாக்கி தன் பெயரைக் கெடுத்துக் கொண்டது. தமிழ்த் தேசிய இராணுவத்தில் நம்பிக்கை வைத்து, தன் தலையிலேயே மண்ணை அள்ளி போட்டுக்கொண்டது. விடுதலைப் புலிகளுக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் இந்தியப் படையோடு சேர்ந்துமாகாண சபையை 'அந்தோ,' என்று, கைவிட்டு 'ஈழப் பிரகடனப் புரளி' செய்து இந்தியாவுக்குத் தப்பி ஓடியது.

இலங்கை அரசாங்கத்தோடு இந்தியப் படையை வெளியேற்றும் விவகாரத்தில் ஒன்று சேர்ந்த விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளை நீடித்து வட-கிழக்கு மக்களைச் சுரண்டி பல நூறு கோடி ரூபாய்ப் பணத்தைச் சேர்த்துக்கொண்டது.

தம்மை தமிழ் தேசிய இராணுவத்திடமிருந்து காப்பாற்றுவதென்ற பெயரில் ஆயுதங்

8 ஆம் பக்கம் பார்க்க





காலி மாவட்ட மிலித்துவையில் நிஸாம், தலைமையில் அண்மையில் நடைபெற்ற இஸ்லாமியமாநாட்டில் 'இன்றைய உலகில் முஸ்லிம் உம்மத்துக்கள்' எதிர்நோக்கும் சவால்கள் என்னும் தலைப்பில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் சகோ அஷ்ரஃப் சிறப்புரை நிகழ்த்துவதையும், கட்சியின் தேசிய கொள்கை பரப்புச் செயலாளரும் முஸ்லிம் காங்கிரஸ் பத்திரிகை ஆசிரியருமான சகோ, மருதூர்க் கனி, மட்டக்களப்பு மாகாண சபை உறுப்பினர் சகோ. முஹிதீன் அப்துல் காதர், உரை நிகழ்த்துவதையும் படத்தில்காண்கிறீர்கள்.

மேடையில் அம்.மா.சபை உ. சகோ. அப்துல் மஜீத், காலி மாவட்ட அமைப்பாளர் அல்ஹாஜ் ஹஸன் ஜே.பி, சகோ. காமில், திரு. சொமரத்தின, சங்கைக்குரிய ஹஸன் அல் மஷ்ஹூர் மௌலானா, சங்கைக்குரிய ஆலிம் - ஹாபிஸ் அப்துல்மஜீத் அரூஸ்மௌலானா தென்னிலங்கை இஸ்லாமிய நலன்புரிச் சங்கத் தலைவர் ''கோல்டன் சுபைர்'' அமர்ந்திருப்பதையும்காண்கிறீர்கள்.

## "சகல பிரதேச சபைகளிலும் முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடும்!"

### தேசிய கொள்கை பரப்புச்செயலாளர்.

நாடுமுழுவதும் விரைவில் உள்ளூராட்சி பிரதேச சபை தேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன. ஏற்கனவே கட்சியின் அதி உயர் பீடத்தினால் மாவட்டங்கள் தோறும் தேர்தல் நடவடிக்கைகளுக்காக பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

போட்டியிட விரும்பும் வேட்பாளர்கள், தம் பிரதேசத்து அமைப்பாளரோடும், மாவட்ட பொறுப்பாளர்களோடும் தொடர்பு கொள்ளவேண்டும்.

முஸ்லிம்கள் வாழுகின்ற எல்லாப் பிரதேச சபைகளிலும் முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடும்.
எந்த கட்சியோடும் நாம் உடன்பாடு செய்துகொள்ளப்போவதில்லை.

இந்த பிரதேசசபைத் தேர்தல்களில் முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடுவதன் மூலம் ஐக்கியமும் தனித்துவமும் நிலைநிறுத்தப்படும். இதன் மூலம் தேசிய ரீதியாக நமது பலத்தை உணர்த்துவதோடு, சர்வதேச முஸ்லிம் அரங்கிலும் நமது ஐக்கியமும் லட்சியமும் பிரகடனப் படுத்தப்படும்! முஸ்லிம்கள் தமது கட்சியான முஸ்லிம் காங்கிரஸுக்கு வாக்களிப்பதன் மூலம், அதிகமான பிரதேச சபைகளில் அதிகாரத்தை கைப்பற்றும் வாய்ப்பை இந்த தேர்தலின் மூலம் அல்லாஹ் முஸ்லிம்களுக்கு தந்திருக்கிறான். இந்தச் சந்தர்ப்பத்தை நாம் பயன் படுத்திக்கொள்ளவேண்டும். கடந்த காலங்களில், ''பச்சை என்றும்'' ''நீலம் என்றும்'' நாம் பிளவுபட்டு நின்ற பெருந் தவறை, இனியும் செய்யக்கூடாது!

அவ்வாறு, இனியும் நாம் பிரிந்து நின்றோமானால் பாரிய கஷ்டங்களுக்கும் நஷ்டங்களுக்கும் உள்ளாக்கப்படுவோம்! நமது எதிர்கால சந்ததிச்கு துரோகம் செய்தவர்களாவோம்!

இன்ஷா அல்லாஹ்! எதிர்வருகின்ற பிரதேச சபை தேர்தல்களில் ஒற்றுமையாக நமது கட்சிக்கு. நாம் வாக்களிப்பதன் மூலம் முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளை உறுதிப்படுத்துவோம்! மற்ற சமூகங்களின் உரிமைகளை மதிப்போம்! எங்கள், தனித்துவத்தைப் பாதுகாப்போம்! அல்லாஹ் எங்களை கைவிடவேமாட்டான்!

## போரை நிறுத்தி பேச்சுவார்த்தை தொடருங்கள்!

"சாணக்கியன்"

என்ன தான் முரண்பாடுகள் இருந்த போதிலும் பேச்சுவார்த்தைகள் மூலம் மாத்திரம்தான் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காணமுடியும்! பேச்சுவார்த்தைகள் எத்தனை முறை தோல்வி அடைந்தாலும் சரிதான் அதை மீண்டும் மீண்டும் தொடர்வதுதான் மனித குலத்தின் நாகரிகமாகும். 'பிழையான யுத்தத்தைசரியான யுத்தத்தால் முறியடிக்க முடியும்' என்ற, போதிலும் அதன் இறுதி முடிவும் பேச்சுவார்த்தை மூலமே முழுமை பெறுகின்றது! எனவே, இன்று ஏற்பட்டுள்ள தேசியப் பேரழிவைத் தடுக்கவும் தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணவும் உடனடியாக போரை நிறுத்தி பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்கவேண்டும்!



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் காங்கிரஸ்

مسلم کنگرس

375 2, டாம் வீதி, கொழும்பு-12 தொலைபேசி: 431711


## வடகிழக்கில் நடந்த அரசியல் தற்கொலைகள்!

வட கிழக்கில், அரசியற் தற்கொலை செய்வதற்கு புலிகள் பந்தயம் கட்டினார்கள்! அரசாங்கமோ அதற்கு சாட்சியாக இருந்தது. முஸ்லிம்களோ, "வேண்டாம் இந்த பந்தயம்" என்றோம்! அவர்கள் கேட்கவேயில்லை. இன்று அனுபவிக்கிறார்கள்! எல்லாவற்றுக்கும் அல்லாஹ் ஒருவனே போதுமானவன்.

வடகிழக்கில் முஸ்லிம்களை பணயமாகவும் பந்தயமாகவும் வைத்து அரசியற் சூதாட்டத்தை நடத்துவதற்கு அரசாங்கம் மட்டுமல்ல, புலிகளும் நினைத்தன!

குறிப்பாக, கிழக்கில் முஸ்லிம்களின் அரசியல் சமூக பொருளாதார கலாச்சார விழுமியங்களின் தனித்துத்வதை அங்கீகரிக்காத நிலையில், இலங்கை - இந்திய ஒப்பந்தம் செய்யபட்டபோதும், அதன்பின்பு, இந்தியப்படை இங்கிருந்து விலகிக்கொண்டபோதும், முஸ்லிம்களின் தனித்துவமும் பொருளாதரமும் சூறையாடப்பட்டு சின்னாபின்னமாக்கப்பட்டது. இதற்கு அரசாங்கம் ஒத்தாசை புரிந்தது.

அரசசாங்கத்தைப் பொறுத்தமட்டில், அவர்கள் வளர்த்த கிடாவே மார்பில் பாய்ந்த போதும், குருவுக்கு மிஞ்சிய சிஷ்யர்களைப்போல புலிகள் செயற்பட்டபோதும், ஞானம் பிறக்காத அரசாங்கம் "குப்புறவிழுந்தாலும் மீசையில் மண் படவில்லை" என்பதுபோல நடந்துகொண்டது!

இவற்றையெல்லாம், நாடோவியக்கும் வண்ணம் அரசியல் தீர்க்கதரிசனதுடன் தலைவர் சகோதரர் அஷ்ரஃப் அவர்கள் பாராளுமன்றத்தில் எத்தனை தடவைகள் எடுத்து கூறினார்கள்! எல்லாம் விழலுக்கு இறைத்த நீராகி, செவிடன்காதில் ஊதிய சங்காகியது.

வடகிழக்கு மாகாணசபையில் அதிகாரத்திலிருந்த ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியினரும், அவர்களின் அருமைக் கூட்டாளிகளான ஈ.என்.டி.எல்.எப் கோஷ்டியினரும் வெறும் கற்பனாவாத சோசலிஸ முகமூடிகளையே அணிந்திருந்தனர். அவர்கள், சோசலிஸ தத்துவத்தின் அரிச்சுவடியைக்கூட அறிந்திருக்கவில்லை. அதனால்தான் மிக மோசமான பச்சை இன வெறியர்களாகவும், ஒரு சமூகத்தின் அடிப்படை உரிமைகளையே மதிக்கத்தெரியாத முஸ்லிம் விரோதிகளாகவும் வெறும் சுய நல வேட்கை கொண்ட கொள்ளைகாரர்களாகவும் நடந்து கொண்டனர். அதனால் மக்களிடமிருந்து தனிமைப்படுத்தப்பட்டனர். வெறுப்புகளுக்கும் உள்ளாகினர்.

காரைதீவில் 42 பொலிஸாரை மாத்திரம் தெரிந்தெடுத்து, காட்டுமிராண்டித்தனமாக "ஒரு, மைலாய்ப் படுகொலை" செய்ததோடு, ஈ. பி. ஆர். எல். எப். ஈ.என்.டி.எல்.எப். கூட்டத்தினரின் முகமூடி கிழித்தெறியப் பட்டது! இதன்மூலம், தேச சர்வதேச அரங்குகளில் தோலுரிக்கப்பட்டு நிர்வாணமாக்கப்பட்டார்கள்.

கடந்த ஜூன் 11 ஆந் தேதியோடு, "அவர்கள், ஈ.பி.ஆர்.எல்.எவ்வுக்கு நாங்கள் - புலிகள், அப்படி ஒன்றும் சளைத்தவர்களல்ல!" என்று மேலும், உறுதிப்படுத்தி, "ஒரு குலைத் தேங்காயில் அடித்தேங்காயும் ஒன்றுதான் நுனித்தேங்காயும் ஒன்றுதான்" என்று நிறுவி, கிழக்கில் கல்முனை, அக்கரைப்பற்று, கிண்ணியா, மூதூர், உப்புவெளி போன்றஇடங்களில் நூற்றுக்கணக்கான முஸ்லிம்பொலிசாரை தனியே பிரித்தெடுத்து காட்டுமிராண்டித்தனமாக கொலை செய்தும் சுட்டுப்பொசுக்கியும் சப்பித்துப்பியும் சங்காரப்பழி தீர்த்துக் கொண்டார்கள்.

புலிகளின் நரபலிவேட்கை இன்னும் அடங்கவில்லை! எனவேதான், இன்று உடனடியாகவே இனவாதபோட்டித் தமிழ்க் குழுக்களிடமிருந்து முஸ்லிம் சமூகம் தன்னை பாதுகாத்துக்கொள்ள வேண்டிய அவசரமும் அவசியமும் ஏற்பட்டுள்ளது. எனவே, இலங்கையின் எல்லாபாதுகாப்புபடை பிரிவுகளிலும் முஸ்லிம் இளைஞர்கள் தாராளமாகச் சேர்ந்து தேசிய நலனுக்கும் சமூக நலனுக்கும் தொண்டாற்ற பயிற்சி பெறுவது அவசியமாகின்றது.

தமிழ்மிதவாதிகள் தொடக்கம், சகல தீவிரவாத குழுக்களிடமும், "ஒன்றுபட்ட வடகிழக்கில் முஸ்லிம்களின் அரசியற்தனித்துவத்தை அங்கீகரியுங்கள், ஒன்றுபட்டு போராடுவோம்' என்று, எத்தனை தடவைகள் வேண்டுகோள் விடுத்திருந்தோம்!

"ஒரு சமூகத்தை அவர்கள் விரும்புகின்ற அடையாளங்ளால்தான் அங்கீகரிக்க வேண்டும்" என்ற, அடிப்படை மனித உரிமையைக்கூட கணக்கில் எடுக்காமல் "தமிழைப் பேசுவதால் முஸ்லிம்களும் தமிழர்களே" என்ற, காலாவதியாகிவிட்ட ஒரு பழைய பல்லவியை, எவ்வளவு சிறுபிள்ளைத்தனமாக பாடினார்கள்!

"வட கிழக்கில், தமிழ் முஸ்லிம் உறவுதான் எந்த விடுதலைக்கும் அடிப்படை" என்று, தேவாரம் ஓதிக் கொண்டே கோயிலை இடித்துத்தள்ளியிருக்கிறார்கள்! போட்டித்தமிழ்க்குழுக்கள், "வேதம் ஓதுவதை இனியாவது நிறுத்த வேண்டும்!

வட கிழக்கில் முஸ்லிம்களை அரவணைக்காமல் அவர்களின் தனித்துவத்தை அங்கீகரிக்காமல் எந்த தமிழ் விடுதலைக்குழுவும் மூச்சுவிடவே முடியாது! என்பதை உணர்ந்து ஏற்றுக்கொள்ள வேண்டும்.

சகோதர முஸ்லிம்களின் அரசியற்தனித்துவத்தை அங்கீகரிக்க மறுக்கும் ஒரு தமிழ்க்குழு, குறிப்பாக புலிகள், எவ்வாறு, ஒரு பெருபான்மைச்சமூகத்திடமிருந்து தமது அரசியற்தனித்துவத்தையும் அதிகாரப்பரவலாக்கலையும் எதிர்பாக்கிறார்களோ தெரியவில்லை!

மாகாணசபை அதிகாரத்தை அப்போது ஏற்றிருந்த ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியாயினும்சரி, சமீபகாலம்வரை அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்த புலிகளாயினும்சரி, வடகிழக்கில் முஸ்லிம்களின் அரசியற்தனித்துவத்தை அங்கீகரித்துக்கொண்டு அதிகாரங்களைப் பெறுவதற்கான போராட்டங்களைத் தொடர்ந்திருந்தால்... இன்று, தனிமைப்படுத்தப்பட்டு, "தாளியையும் உடைத்துவிட்டு" 'ஐயோ' என்று நிற்கும் துர்ப்பாக்கியநிலை ஏற்பட்டிருக்குமா? இனியாவது, தமிழ்க்குழுக்கள் குறிப்பாக, புலிகள் சிந்திக்க வேண்டும். அதேவேளை புலிகள் "தனியே தவில் வாசிக்கலாம்" என்ற, நினைப்பை அடியோடு கைவிட வேண்டும்.

தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் இன்றைய அர்த்த மற்றசாவும் பொருளாதார அழிவும் விடுதலைக்கு கொடுக்கின்றவிலையாகமாட்டாது! விடுதலைக்குவிலைகொடுப்பதற்கு தமிழ்மக்களிடம் இன்னும் என்ன இருக்கிறது? தமிழ் மக்களை விரக்தியின் உச்சிக்கு புலிகள் தள்ளியிருக்கிறார்கள்!

இந்த நிலையிற்தான் மாகாணசபைகள் திருத்தச்சட்ட மூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இது அடிப்படை உரிமைகள்மீது மேற்கொள்ளப்படும் அத்துமீறல்கள் மட்டும்மல்லாமல், சிறுபான்மைச் சமூகங்களுக்கு எதிராகக்கொண்டுவரப்பட்ட அதிகாரதுஷ்பிரயோகமாகும்.

நாளை, இதே சட்டங்கள் பெரும்பான்மைச் சமூகத்தின் பல்வேறு அரசியல் சக்திகளுக்கு எதிராகவும் துஷ்பிரயோகம் செய்யப்படலாம். அதுமாத்திரமல்லாமல், இதேசட்டத்தின் மூலம் கிழக்கில்மட்டும் ஒரு தேர்தலை நடத்தி முஸ்லிம்களைக் கொண்டு கிழக்கைப்பிரிப்பதற்கும் அரசாங்கம் அவாக்கொண்டிருப்பதையும் நாம் அறிவோம்.

அதே வேளையில், சுதந்திரம் இடைத்ததாக சொல்லப்ட்டகாலம் தொடக்கம், இன்றுவரைக்கும் மாறிமாறி வந்த அரசாங்கங்களால் கிழக்கில் குறிப்பாக, அம்பாறை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் "உரிமைமீறல்" களையெல்லாம் நாம் எப்படி மறக்கமுடியும்? அந்த உரிமை மீறல்களை அரசாங்கம் ஜீரணித்தாகுமா?

இந்த அரசாங்கம், இப்போது வடகிழக்கு மாகாண சபையை கலைத்துவிட்டது. முஸ்லிம்களை அரவணைத்துக் கொண்டு, மக்கள் அபிப்பிராயத்தைக்கோரி, கிழக்கில்மட்டும் ஒரு தேர்தலை நடத்த விரும்புகின்றது.

சிங்கள மக்களின் ஒத்தாசையுடன், கிழக்கில் ஒரு முஸ்லிமை முதலமைச்சராக்கி "முஸ்லிம்களுக்கு சீனிபோளை காட்ட" அரசாங்கம் நினைக்கின்றது. ஆனால், "ஆறுகடக்குமட்டும் அப்பப்பா ஆறுகடந்தபிறகு நீயாரு? நான்யாரு?" இது, மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களிடமிருந்து முஸ்லிம்கள் கற்றுக்கொண்ட அரசியற்பாடம்!

இந்த அரசாங்கம் தனக்கு தேவைப்படும்போதுமாத்திரம் முஸ்லிம்களை அரவணைத்துக்கொள்வதும் இரக்சம் காட்டுவதும் வேண்டாதபோது, தள்ளிவிடுவதும் கடுகடுப்பதும், ஏன் அவர்களின் அரசியற்தேவைக்காக, புலிகளுக்கு முஸ்லிம்களை பலிகொடுத்துவிட்டு பார்த்திருந்ததையும் நாங்கள் எப்படி மறக்க முடியும்?

மீண்டும் ஒருமுறை முஸ்லிம்களை, புரியாணிக்குள் போட்டுவிட்டு வீசுகின்ற ரம்பை இலைகளாக்குவதற்கு எப்படி ஆதரவு வழங்க முடியும்?

இதே வேளையில், தமிழ்க்குழுக்களின் கடந்தகால நடவடிக்கைகள் அணுகுமுறைகளாலும் அவர்கள் முஸ்லிம்களுக்கு செய்த கொடுமைகளாலும் குறிப்பாக, புலிகள் மேற்கொண்ட கர்ணகடூரமான எதேச்சாதிகரமான தாக்குதல்களாலும் பொருளாதார சூறையாடல்களினாலும் "வடகிழக்குஇணைப்பு" என்பது, இன்று புயலில் அகப்பட்டு ஒட்டை விழுந்த ஓடம்போலாகிவிட்டது! இதைச்சரிக்கட்ட இந்தியா வருமென்று எதிர்பார்க்க முடியுமா?

ஆன போதிலும்கூட, வடகிழக்கில் அரசியற்தற்கொலைக்கு புலிகள் பந்தயம் கட்டிக்கொண்டு தறிகெட்டு ஆடிய ஆட்டங்களுக்கு மத்தியிலும், முஸ்லிம்களை பணயம் வைத்துக்கொண்டு, "இனசம்ஹாரம்" செய்கின்ற இந்த வேளையிலும் இன்று விடுதலைக்கு, "அநியாய விலை கொடுத்து" அழிகின்ற தமிழ்மக்களுக்காக எங்கள் நெஞ்சம் நெகிழ்கின்றது. எனவேதான், முடிந்த எல்லாவழிகளிலும் தமிழ் மக்களுக்கு உதவமுஸ்லிம்கள் முன்வரவேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கின்றோம்.

## புலிகளின் முதுகெலும்பை அரசாங்கம் முறிக்கலாம்! ஆனால் அச்சுறுத்தல் ஓயுமா?

8ம் பக்க தொடர்ச்சி

சபைக்காகப் போராடிவருவதும் முஸ்லிம்காங்கிரஸ்தான். அத்தோடு, முஸ்லிம்கள் பெரும் பான்மையாக வாழுகின்ற பிரதேசங்கள் அனைத்தையும் பொருத்தமான வகையில் முஸ்லிம் உப-அரசாங்க அதிபர் பிரிவுகளாக்க வேண்டுமென்றும் கோரிவருவதும் முஸ்லிம் காங்கிரஸ் தான்.

தமிழ் பயங்கரவாதக்குழுக்களினால் முஸ்லிம் இளைஞர்கள் அகதிகளாக்கப்பட்டு கொழும்புக்குத் தப்பி வந்தபோது அவர்களுக்கு அகதிகள் முகாம் திறந்து ஆதரித்ததும் முஸ்லிம் காங்கிரஸ்தான்.

இன்று, முஸ்லிம்களின் அரசியல், சமூக பொருளாதார மத, கலாசாரப் பிரச்சினைகள் எல்லாவற்றிற்கும் தலைகொடுத்துக் காப்பாற்றி வருவதும் முஸ்லிம் காங்கிரஸ் தான்,

முஸ்லிம்களின் உரிமைகளுக்காக போராடியதில் மாகாண சபை உறுப்பினர்கள் மர்ஹூம் அலிஉதுமான், மர்ஹூம், மன்சூர் ஆகியோரையும் ஏனைய கட்சி ஆதரவாளர்களையும் சமூகத்துக்ககாக உயிர்த்தியாகம்செய்ததும் முஸ்லிம் காங்கிரஸ்தான்.

முஸ்லிம் சமூகத்துக்காக தமது வீடு வாசல்களை இழந்து முஸலிம் சமூகத்தின் தலைமைத்துவத்தைக் காப்பதற்காக ஹிஜ்றா சென்றுள்ள மாகாணசபை உறுப்பினர்களும் முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்தவர்கள்தான்.

ஆதலால், வடக்கு-கிழக்கிலுள்ள முஸ்லிம்கள் அனைவரும் எந்தத் தமிழர் கட்சியிலோ, சிங்களக் கட்சியிலோ நம்பிக்கை வைக்கக்கூடாது. தமது அற்ப சந்தோஷங்களுக்காக பட்டம் பதவிகளுக்காக சந்தர்ப்பவாதிகளாக நடந்து கொள்ளக் கூடாது.

அனைத்து முஸ்லிம்களும் ஒரேதாய் வயிற்றுப் பிள்ளைகள் போல தமது சிறுபிரச்சினைகளை மறந்து முஸ்லிம் காங்கிரஸின் கீழ் ஒற்றுமைப்பட்டு உறுதியோடு இருக்க வேண்டும்.

எதிர்வரும் தேர்தல்கள், நமது உரிமையை உறுதிப்படுத்தும் தேர்தலாகும். இந்த முறை நாம் தவறிவிடக் கூடாது. முஸ்லிம் சமூகத்தின் பழியையும், நமது பிற்கால சந்ததியின் பாவத்தையும் நாம் சுமந்து கொள்ளக் கூடாது.

ஒற்றுமைப்படுவோம்!
உரிமைகள் காப்போம்!
அல்லாஹூ அக்பர்.

## வடகிழக்கில் ஏழுலட்சம் அகதிகள் அதோகதி!

சகோ. அபூபக்கர்எம்பி.

இந்த நாட்டின், வரலாற்றில் என்றுமே இல்லாதவாறு வடக்கில் ஏழு லட்சம் மக்கள் அகதிகளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

கிழக்கு மக்கள் ஓரளவு ஆறுதல் அடைந்த போதிலும் வடக்கே, மன்னார், வவுனியா முல்லைத்தீவு, மாவட்டங்களிலிருந்தும் திருக்கோணமலை, யாழ்ப்பாணம் சோனகதெருவிலிருந்தும் மக்கள் அகதிகளாகி பசிக்கொடுமையினாலும் நோயினாலும் வெளியேறி அலைந்து அழுந்துகிறார்கள்.

அரசாங்கமோ தனதுபழைய அறிக்கைகளை காட்டி உணவுக் கையிருப்பைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறது. ஆனால், யதார்த்தத்தில் ஏழுலட்சம் மக்கள் கண்ணீரும் கம்பலையுமாக அலைகிறார்கள்!

அரசின் நடவடிக்கைகளை

7ம் பககம் பர்ர்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கை பிரிக்க வேண்டுமா?

37 ★ கே. போகிறபோக்கைப் பார்த்தால் ''கிழக்கைப் பிரிக்கவேண்டும்'' என்ற, நிலைப்பாட்டை அரசாங்கம் எடுக்கும் போலிருக்கிறதே! அப்போது முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு எப்படி இருக்கும்?

எம்.ஸி. எம். பளீல்
அக்கரைப்பற்று,3

ப. கண்களை மூடிக்கொண்டு ''கிழக்கைப் பிரிக்கவேண்டும்'' என்ற நிலைப்பாட்டை முஸ்லிம் காங்கிரஸ் இன்றைய சூழ்நிலையில் ஆதரிக்கும் என்று இப்போதைக்கு நாம் நம்பவில்லை!

ஏனென்றால் திட்டமிடப்பட்ட கல்லோயா குடியேற்றத்திட்டம், அதைத் தொடர்ந்து நடைபெற்று வந்த திட்டமிடப்படாத குடியேற்றம், கரும்புச் செய்கைக்கென்று நிலம் சுவீகரிக்கப்பட்டு பெரும்பான்மைச் சமூகத்துக்கு மாத்திரம்பங்கீடு, இரவோடு இரவாக மாவட்ட எல்லைகளை மாற்றியது, கிழக்கில் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தின் முஸ்லிம்களின் இயற்கையான இனவிகிதாசாரம் மாற்றப்பட்டது, முஸ்லிம்களின் பாரம்பரிய நிலங்களும் அபகரிக்கப்பட்டது.......

இலங்கையில் முஸ்லிம்களின் பெயர் சொல்வதற்கிருந்த ஒரேயொரு முஸ்லிம்கள் பெருபான்மையாக வாழ்ந்த மாவட்டமும் இன்று தட்டிப் பறிக்கப்பட்டது, ......

இவைகள் எல்லாம் எங்களின் கடந்தகால அனுபவங்கள் மாத்திரமல்ல இன்றும் நிகழ்ந்துகொண்டிருப்பவைகள்!

இந்த அநியாயத்தை தகசப்பான உண்மையை பெருபான்மைச் சமூகம் ஜீரணித்தே ஆகவேண்டும். அதேவேளையில், வடகிழக்குக்கு வெளியே வாழுகின்ற முஸ்லிம்களும் இதை அறிந்துவைத்திருக்கவும் வேண்டும். '' அதாவது, அம்பாறை மாவட்டத்தில் இப்போது முஸ்லிம்கள் பெரும்பான்மையாக இல்லை ''

இந்தநிலையில், பெரும்பான்மைச் சமூகம், சிறுபான்மைச் சமூகமான முஸ்லிம்களின் விஷயத்தில் பெருந்தன்மையோடு ஓர் உடன்பாட்டுக்கு வராத நிலைமையில் கிழக்கைப் பிரிப்பதற்கு ஆதரவு வழங்க வேண்டுமென்று எதிர்பார்க்கமுடியுமா?

தப்புவதற்காக, பொரிக்கும் சட்டியில் இருந்து பாய்ந்து அடுப்புக்குள் விழுந்தகதையாகிவிடக்கூடாது! முஸ்லிம்கள் மிகவும் தீர்க்க தரிசனத்தோடு நடந்துகொள்ள வேண்டும்.★

38 ★ கே, புலிகளின் இன்றைய நிலைபற்றி என்ன சொல்வீர்கள்?

ஆ. மு. சுபைர் கல்முனை-5.

அரசியல் அரிச்சுவடி தானும் தெரியாதவர்கள். பொது எதிரிக்கு எதிராக ஐக்கியப்படமுடியாத வெறும் ஆயுத வெறிபிடித்த பாஸிஸவாதிகள்.

அவர்களின் இன்றைய அவசரத் தேவை, ''சரியான அரசியற்தலைமை''

எதிரிகளையும் நண்பனையும் இனம் காணத்தெரியாத முளிகண் குருடர்களாகிவிட்டார்கள்!

சகோதர முஸ்லிம்களை அரவணைத்துக்கொண்டு, அவர்களின் அரசியற்தனித்துவத்தை, உரிமைகளை ஏற்றுக்கொண்டு விடுதலைப்போராட்டத்தை முன்னெடுக்கத் தெரியரமல் பின்னடைந்து நிற்கிறார்கள்.

இன்றைய நிலையில், உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் நண்பர்களே இல்லாமல் தனிமைப்படுத்தப்பட்டு நிற்கிறார்கள்.

குருட்டுத்தனமான ஆயுத நடவடிக்கைகளால் வடகிழக்கு தமிழர்களின் எதிர்காலம் மட்டுமல்ல, முஸ்லிம்களின் எதிர்காலமும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

புலிகள் என்ன நியாயங்களைச் சொன்னாலும், சரிதான், வெண்ணெய் திரண்டு வரும்போது தாளியை உடைத்துவிட்டு நிற்கிறார்கள்!

விடுதலைப் போராட்டம் சாண் ஏறி, முழம் சறுக்கி நிற்கிறது! இனி காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.●

## கேள்வியும் பதிலும்

### —தர்வேஷ்ஞானி—

39★ கே.வடக்கு கிழக்கில்புலிகள் ஆயுதங்களுடன் இருக்கும் போது, தேர்தல் ஏதாவது நடைபெற்றால் முஸ்லிம் காங்கிரஸ் அத் தேர்தலில் பங்குபற்றுமா? இவ்வாறான சூழலில் மக்கள் வாக்களிக்கப் போகலாமா?

எம். சியாத்.
காத்தான்குடி.

ப. புலிகளின் கைகளில் மட்டுமல்ல எலிகளின் கைகளில் ஆயுதம் இருந்தாலும் ஆபத்து ஆபத்தேதான்! ஆயுதத்தின் முன்னால் அனைவரும் சரணே! கடந்த தேர்தலின்போது ஈ.பி.ஆர்.எல்.எப் -ஈ.என்.டி.எல்.எப். என்ன செய்தார்கள்? துப்பாக்கி முனையில் முஸ்லிம் கிராமங்களில்புகுந்து-வாக்குச்சாவடிகளுக்குள் நுழைந்து முஸ்லிம் வாக்குகளை பலாத்காரமாகப் பெட்டிகளுக்குள் கட்டுக்கட்டாக, போட்டுக்கொண்டு செல்லவில்லையா?

பாராளுமன்ற ஜனநாயகம் என்பதே ஒரு கேலிக்கூத்து. அதிலும் ஆயுதம் கையிலிருந்தால் கேட்கவா வேண்டும்?

அப்போது, சிங்கம், புலி, கரடி பூனைகளுக்கெல்லாம் விளையாட்டாகவும் எங்களுக்கு மரணமாகவும் இருக்கும்!

எனவே, அவ்வாறான சூழலில் மக்கள் வாக்களிக்கச் செல்லலாமா? நீங்களே சொல்லுங்கள்! ஒன்று மட்டும் நிச்சயம்! ஒரு சமூகத்தின் விடுதலை வேட்கையை மற்றொரு சமூகம் தணிக்கவே முடியாது.●

## "புலிகளோடு தொடர்ந்து பேசுவதில் அர்த்தமே இல்லை!" அமைச்சர், தொண்டமான்.

41 ★ கே. ''புலிகளோடு தொடர்ந்தும் பேசுவதில் அர்த்தமே இல்லை'' என்று அமைச்சர் தொண்டமான் பேசியிருக்கிறாரே! என்ன சொல்லப் போகிறீர்கள்?

ஏ,கே. எஸ். ஜஹான்
அக்கரைப்பற்று-5

ப. எல்லாருக்கும் அலுத்த பருவமாப்போச்சி! தொண்டமான் அப்படிப் பேசாமல் வேறு எப்படிப் பேசுவார்? எவ்வளவு நம்பிக்கையோடு அரசு-புலிகள்பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்தது. பாதுகாப்புஇராஜாங்க அமைச்சர் ரஞ்சனும், நீதி அமைச்சர் ஷாஹுல் ஹமீதும் நாடாளுமன்றத்துக்குள்ளும் வெளியேயும் எத்தனை பிரச்சினைக்கு முகம் கொடுத்தார்கள்? கண்களைமூடிக்கொண்டுபுலிகளுக்காக எத்தனை வக்காலத்து வாங்கியிருப்பார்கள்? வடகிழக்கில்புலிகளுக்காகமுஸ்லிம்களையே பலிகொடுத்தார்கள்! முட்டாள்தனமாக முஸ்லிம்களையும் பகைத்துக்கொண்டு, காலம், நேரம், சந்தர்ப்பம் தெரியாமல் ஹிட்லர் ரஷ்யாவின் மீது படையெடுத்தது போல, அரசின் மீது மூர்க்கத்தனமான ஒரு தாக்குதலுக்கு புலிகள் தூபமிட்டார்கள்! விளைவு என்ன? தமிழ் மக்களும், தமிழ்த் தலைவர்களும் விரக்தியின் விளிம்புக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள். இதன் மூலம் தேசிய மட்டத்தில் மட்டுமல்ல, அரசாங்கத்தின் அரசியல் தந்திரோபாயங்களால் சர்வதேச அரங்கிலும் புலிகள் தனிமைப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். ●

### புலிகள் நெருப்போடு விளையாடுகிறார்கள்-கிட்டு

42★கே. புலிகள்நெருப்புடன் விளையாடுகிறார்கள் - பிழையான நேரத்தில் பிழையான யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள்'' என்று கிட்டு அறிக்கை விட்டிருக்கிறாரே!

எம். எம். ஜஃபீர்,
சம்மாந்துறை-1.

ப. பாவம் கிட்டு! ஏற்கனவே உள்முரண்பாடு காரணமாக உயிரை இழப்பதற்குப் பதிலாக காலை இழந்து கஷ்டத்தில் வாழ்ந்து கொண்டிருப்பவர். புலிகளின் இன்றைய நிலையை அப்படியே சொல்லியிருக்கிறார், யதார்த்தவாதிகள் புலிகளின் விரோதிகள்! கிட்டுவை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும். ●

## தோழர் பத்மநாபாவின் இழப்பு!

40 ★கே, இந்தியாவில் நடந்த ஈபிஆர்எல்எப் படுகொலைகளைப்பற்றியும் அதன் செயலாளர் நாயகம் பத்மநாபா பற்றியும் ஞானியார் என்ன நினைக்கிறாரோ?

கோல்டன் சுபைர், காலி.

ப. இந்த நூற்றாண்டில் தமிழ் சமூகத்துக்கு ஏற்பட்ட பெரும் இழப்பு! கொஞ்சநஞ்சமாக இருக்கின்ற தமிழ் முற்போக்கு சக்திகளும் அழிக்கப்படுகின்ற அக்கிரமம்!

அரசியலே தெரியாத காட்டுமிராண்டிகளால் மேற்கொள்ளப்பட்ட மாபெரும் தாக்குதல்! பெரும் மனிதாபிமான அழிவு!

அதற்காக, ''ஈபிஆர்எல்எவ் என்னவோ அரசியல் தெரிந்த கட்டுக்கோப்பானவர்கள் இனவாதத்துக்கு அப்பால் சிந்தித்து செயல்பட்ட சமதர்மவாதிகள்'' என்று, அவர்களுக்குமகுடம் சூட்டவரவில்லை.

வட-கிழக்கு மாகாணசபையில் அதிகாரத்தில் இருந்த பொழுது அவர்கள் விட்ட அதே தவறுகளைத்தான் குறிப்பாக, முஸ்லிம்கள் விஷயத்தில் புலிகளும் செய்தார்கள். அதனை எல்லாரும் இன்று அனுபவிக்கிறார்கள். அது இருக்கட்டும்.

தோழர் பத்மநாபாவின் இழப்பு, முற்போக்குச் சக்திகளுக்கு ஏற்பட்ட மாபெரும் இழப்பாகும். சமதர்ம தத்துவத்தில் நம்பிக்கை வைத்து அதை நடைமுறைப்படுத்துவதற்காக கட்சிக்குள்ளேயே இனவாதத்துக்கு எதிராக போர்ப்பிரகடனமே செய்தவர்! முஸ்லிம்களின் சுயாட்சியை- தனித்துவத்தை- பாதுகாப்பை ஏற்றுக்கொண்டவர்! உயர்ந்த-மனிதாபிமானி. சர்வதேச முற்போக்கு சிந்தனையாளர். இவரையும் ஏனைய ஈபிஆர்எல்எவ் மத்திய குழு உறுப்பினர்களையும் மிருகத்தனமாகப் பலிகொண்டதன் மூலம் முற்போக்கு ஜனநாயக சக்திகளை அழித்துவிடமுடியாது ●

42★கே மாகாண சபைக்கான அதிகாரங்கள் எவை? இவை மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுவிட்டதா?

எச்.எம்.அஹமது குலாம்,
48-9ஜி, பீர்சாஹிப் வீதி,
கொழும்பு-12,

ப. மத்திய அரசு ஒன்று. அதிலும் பெரும்பான்மைச் சமூகத்தின் அரசு ஒன்று அதிகாரத்தைப் பரவலாக்கி, அதை அந்த பிரதேச மக்களிடம் ஒப்படைப்பது என்பது அவ்வளவு லேசாக நடந்து முடிகிற காரியமல்ல!

ஆனானப்பட்ட மிகப் பெரும் ஜனநாயக நாடான இந்தியாவிலேயே இன்னும் மாநில அரசுகளுக்கு அதிகாரங்களை பரவலாக்கி முடியவில்லை. மத்திய அரசுக்கும் மாநிலங்களுக்குமிடையில் இன்னும் இழுபறி இருந்து கொண்டே இருக்கிறது.

சரி இந்தியாவைத்தான் விடுவோம். சமதர்ம நாடுகள் என்ன பெறும்? மாநிலங்களுக்கு பிரிந்து செல்லும் உரிமையே உண்டென்று யாப்பில் எழுதி வைத்திருக்கும் சோவியத்து ரஷ்யாவிலேயே மாநிலங்களில் வாழும் மக்களுக்கு சுயாட்சி என்பது அரைகுறையில்தான் நிற்கிறது! அதனால்தான் அங்கு போராட்டமே வெடித்திருக்கிறது.

இந்த நிலையில் ''இலங்கையில், மாகாண சபைக்கு அதிகாரங்கள்'' என்பது, உடனடியாக நிறைவேறுகின்ற காரியங்களா என்ன? புலிகளின் மூர்க்கத்தனமான அரசியல் சாணக்கியம் தெரியாத, சகோதர முஸ்லிம்களை அணைத்துக்கொண்டு போராடத் தெரியாத முட்டாள்தனமான நடவடிக்கைகளால் வடகிழக்கு [illegible] இயல் அதிகாரங்களே 'அந்தோ' என்று இடையில் நிற்கின்றது! ●

## அடியோடு புலிகளை அழித்துவிட முடியுமா?

43★ கே. அரசாங்கத்தால் புலிகளை அடியோடு அழித்துவிடமுடியுமா?

ஏ. அமானுல்லா ஹபுகஸ்தலாவ.

ப. அப்படி நாம் நினைக்கவில்லை. நினைக்கவும் முடியாது, அரச படைகள் மூர்க்கத்தனமான தாக்குதல்களை மேற்கொள்ளும்போது புலிகளால் நேரடியாக அந்த யுத்தத்தை எதிர்கொள்ளமுடியாது. அப்போது அவர்களின் முன்னுள்ள ஒரே வழி தலைமறைவு. கெரில்லா யுத்தம்! இனி, 'கடந்த கஷ்டமான காலம்' திரும்பும்! காலம் மேலும் இழுபடும். மக்கள்தான் பாவம், இன்னமும் விடுதலைக்கு விலைகொடுப்பதற்கு மக்களிடம் என்ன இருக்கிறது?

இந்தமுறை ஏற்பட்டிருக்கும் மோதலில் புலிகளின் அரசியல் குருட்டுத்தனத்தால் அரசாங்கம் தனது பக்கத்தை தேசிய சர்வதேசிய மட்டங்களில் போதிய அளவு நியாயப்படுத்திக்கொண்டது. அதனால், புலிகளின் பலம் நியாயமான அளவு மேலும் குறையும் எனினும் புலிகளை அடியோடு அழித்துவிடலாம் என்று நம்பினால் அது அரசியல் குழந்தைத்தனமாகும்.

ஆயுத முனையில் அதிகாரத்தை அனுபவித்தவர்கள் அவ்வளவு விரைவாக அதை கீழே போடமாட்டார்கள். நீங்கள் இருந்து பாருங்கள், மீண்டும் அரசு-புலிகள் பேசத்தான் போகிறார்கள். ஏதோ ஒருவகையில் இந்தியா தலையிடத்தான் போகிறது. இந்த அரசியலில் நிரந்தரமான நண்பனுமில்லை. நிரந்தரமான எதிரியுமில்லை! இடையில், முஸ்லிம் சமூகந்தான் தனது தனித்துவத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்காக ஒற்றுமையுடனும் அரசியற் தீர்க்கதரிசனத்துடனும் செயற்படவேண்டும்.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசரகாலச்சட்டம்! பாராளுமன்றத்தில் தலைவர் அஷ்ரஃப்.26041990

சென்ற இதழ் தொடர்ச்சி

சபாநாயகர் அவர்களே! இன்னும் ஐந்து நிமிடத்தில் எனது உரையை முடித்துக் கொள்ள முயற்சிக்கிறேன். ஆனால் எனது பேச்சு சுதந்திரத்துக்குப் பங்கம் வராமல் காப்பாற்றும்படி வேண்டிக்கொள்கின்றேன்.

நீங்கள் கூறுவதுபோல, நல்லொழுக்கமுள்ள, சிறந்த நாடாளுமன்ற உறுப்பினர்களில் நானும் ஒருவன் என்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

### புலிகளின் சட்டவிரோத நடவடிக்கைகள்

காணி, பூமிகள், வியாபார நிறுவனங்கள் ஆகியவை பலாத்காரமாகப் பறிக்கப்பட்டுஒருவகைசர்வாதிகாரஆட்சி நடப்பதாகக் கூறினேன். உங்கள் அரசாங்கத்தின் சிரேஷ்ட

இத்தகைய அநியாயச் செயல்களை எல்லாம் சகித்துக்கொண்டிருப்பதற்கு அரசாங்கம் சொல்லுகின்ற ஒரேயொரு காரணம் ''புலிகளையும்ஜனநாயகநீரோட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும்'' என்பதாகும். அவ்வாறானால் தற்போதுள்ள ஏனைய ஜனநாயக அமைப்புகளையும், நிறுவனங்களையும் ஒழித்துக்கட்டினால்தான் விடுதலைப்புலிகளை ஜனநாயகவழிக்குக்கொண்டுவரலாம் என்பதுதான் இதன் அர்த்தமா? அல்லது அதுதான் நோக்கமா?

தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் ''ஆயுதங்களை கைவிடமாட்டோம்'' என்று விடாப்பிடியாக நிற்கும்போது ''சுமுகமாக சுயமாக எவ்வாறு அரசாங்கம் ஒரு தேர்தலை நடத்தப்போகின்றது'' என்று இந்த தேசமே கவலைப்படு

நடந்தால் அவர்களை ஜனநாயக நீரோட்டத்துக்கு எந்த விதத்திலும் கொண்டுவர முடியாது. அதேவேளை நாமெல்லோரும் சேர்ந்து அராஜகம், ஏகாதிபத்தியம், சர்வாதிகாரம், மேலாதிக்கம் ஆகியவற்றை உருவாக்குவதோடு நடைமுறையில்இருக்கின்ற ஜனநாயக நிறுவனங்கள், அமைப்புகள் ஆகியவற்றை அழித்து விடுவதற்கும் உடந்தையாகிவிடுவோம்.

### எனது கடமை!

மேன்மைதங்கியஜனாதிபதி அவர்களின் இதயபூர்வமான முயற்சிகளைப்பற்றி நான் குறையாகவோ, ஏளனமாகவோ குறிப்பிடவில்லை. ஆனால் எனது எண்ணங்க

முஸ்லிம் சமூதாயத்தின் உண்மையான மக்கள் பிரதிநிதிகளை கலந்தாலோசிக்காமல் எந்தத் தீர்மானமும் முஸ்லிம்களைக் கட்டுப்படுத்தமாட்டா! என்பதை முஸ்லிம்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் என்ற வகையில் இங்கு கூறிவைக்க கடமைப்பட்டுள்ளோம்.

### நீறுபூத்த நெருப்பு!

முஸ்லிம்கள் இன்றைய நிலையில் சற்று அமைதியாக இருக்கின்றார்கள் என்பதற்காக அரசியல் பலம் குன்றிவிட்டார்கள் என்று தப்புக் கணக்குப் போட்டுவிடக் கூடாது. அவ்வாறு நீங்கள் நம்பவும்மாட்டீர்கள்.

சபாநாயகர் அவர்களே! எங்களை நெருக்கித்தள்ளினால், நிர்ப்பந்தித்தால் நாங்கள் மாற்றுவழிகளைப்பற்றிச் சிந்திக்க தயங்கமாட்டோம்.

''விடுதலைப் புலிகளுடன் நடத்தும் சம்பாஷணைகளின் பெறுபேறுகள் முஸ்லிம்களையும் திருப்திப்படுத்தவேண்டும் அவ்வாறு அமையாவிட்டால் பேச்சுவார்த்தைகள் முடிவடையமாட்டாது'' என்று மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்கள் மீண்டும் மீண்டும் எங்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்று நம்புகின்றோம்.

### பேருவலையில் அடாவடித்தனம்!

இவ்வளவு நேரமும் வடக்கு கிழக்கின் இன்றைய நார்த்த நிலைமைபற்றி பேசிய நான் அதைமுடித்துக்கொண்டுஇந்த நாட்டின்வேறொரு பிரதேசத்திலுள்ள ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசிவிட்டு முடிக்கின்றேன்.

ஐயா! வேருவலை பொலிஸ் அதிகார எல்லைக்குள் தற்போதுள்ள சட்டம், ஒழுங்கு நிலைமைகள்பற்றி குறிப்பிட விரும்புகின்றேன். கடந்த ஒரு வருடகாலமாக பேருவலை பொலிஸ் அதிகார எல்லைக்குள் ஒரு கோஷ்டியினர் நடமாடி வருகின்றனர். இவர்கள் இரவு வேளைகளில் முகமூடி அணிந்துகொண்டு பயங்கர ஆயுதங்களுடன் அடாவடித்தனம் செய்து திரிகின்றார்கள். இந்த விஷயம்பற்றி ஏற்கனவே நான் பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்திருக்கின்றேன். அதை, இப்போது, கௌரவ பாதுகாப்புராஜாங்க அமைச்சரின் கவனத்துக்கும் கொண்டுவர விரும்புகின்றேன்.

அந்தப்பிராந்தியத்தில்இந்த நிலைமை தொடராமலிருக்க அமைச்சர் அவர்கள் தங்களாலான முழு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுவார்கள் என்று நம்புகின்றேன்.

நன்றி.

## நாங்கள், எந்த வீட்டுத்திண்ணையிலும் குந்தியிருக்க விரும்பவில்லை! எங்கள், சொந்த வீட்டிலேயே குடியிருக்க விரும்புகிறோம்! இது எங்கள் பிறப்புரிமை!

அமைச்சர், ஒருவரின் சகோதரருக்குரிய ஒரு பெறுமதி வாய்ந்த வியாபார நிறுவனம் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது. இதற்கு உங்களின் அரசாங்கத்தால் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை,

இளைஞர்களைக் கைது செய்து - கடத்திக்கொண்டு போய் இருட்டறைகளிலும், திகில் காம்பராக்களிலும் போட்டு இம்சிக்கப்படுகின்றனர். தற்காலிக, தான்தோன்றித்தனமான ''கம்கறு-கோடுகள்'' நீதிவழங்குகின்றன, உத்தியோக மொழிகளில் ஒன்றான சிங்கள மொழியில் எழுதப்பட்ட பெயர்ப்பலகைகள் அழிக்கப்படுகின்றன. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு பணிப்புரைகள், புலிகளாலேயே வழங்கப்படுகின்றது.

கின்றது. ''தேர்தலில் நான் கலந்துகொள்ளப்போவதில்லை'' என்று திரு.பிரபாகரனே தீர்மானமாகக் கூறிவிட்டார். எனினும் தமிழ் மக்களின் விடுதலையை வென்றெடுப்பதற்காக விடுதலைப்புலிகளின் இராணுவப் பிரிவுக்கு தலைமை தாங்குவேன் என்றும் கூறியுள்ளார். இதை வேறுவிதமாக கூறுவதாகவிருந்தால் ஜனநாயக வழிக்குள் பிரவேசித்த பின்னரும் ஒரு சட்டவிரோதமான இராணுவத்தை வைத்திருக்கும் அபாயகரமான சூழ்நிலையை இந்த நாடு எதிர்நோக்கவேண்டும் என்று திர்ப்பந்திக்கின்றார். அதுமாத்திரமல்ல! திரு. பிரபாகரன் இவற்றுக்கெல்லாம் மேலாக ''தமிழ் பேசும் மக்களின் ஏக பிரதிநிதிகள் - பேச்சாளர்கள் தமிழ் ஈழ விடுதலைப்புலிகள்

ளையும், அச்சத்தையும் இங்கு தெரிவிக்காவிட்டால் எனது சமூகக் கடமையில் இருந்து நான் தவறியவனாகிவிடுவேன்.

புலிகளை வசப்படுத்தும் முயற்சிகளினால் இந்த நாட்டிலுள்ள ஏனைய மக்களின் நலன்களை அரசாங்கம் புறக்கணித்துவிடக்கூடாது. விடுதலைப்புலிகளின் அடாவடித்தனங்களால் உயிர் நீத்தவர்களுக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் நிவாரணம் கிடைப்பதை அரசாங்கம் உறுதிப்படுத்தவேண்டும்.

### முஸ்லிம்களின் குரல் விடுதலைப்புலிகள் அல்ல!

வடகிழக்கு மாகாணங்களிலுள்ள முஸ்லிம் சமூகம் தமது பேச்சாளராக விடுதலைப் புலிகளை ஒருபோதும் ஒப்புக்கொள்ளவில்லை என்பதை சந்தேகத்துக்கிடமின்றி இங்கு கூறிவைக்க கடமைப்பட்டிருக்கின்றேன். ஒரு சுமுகமான, சுயமானசூழ்நிலையில்இதைத் தீர்மானிக்கும் பொறுப்பை முஸ்லிம் சமூகத்தின் மீதே விடவேண்டும்.

முஸ்லிம்கள் புலிகள் மீது கொண்ட நேசத்தினாலோ, அல்லது பாசத்தினாலோ மனம் விரும்பி அவர்களுக்குப் பணம்கொடுக்கவில்லை. என்பதை அவர்கள் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும்.

புலிகளினால் நேற்றும், இன்றும் கர்ண கடூரமாகத் தாக்கப்பட்டு தத்தளித்துக் கொண்டுகிடப்பதை முஸ்லிம்கள் எப்படி மறக்கமுடியும்.

### முஸ்லிம்களின் அபிலாஷைகளும் நிரந்தர சமாதானமும்!

முஸ்லிம்களின் அபிலாஷைகளும் கோரிக்கைகளும் நிறைவேற்றப்படும்வரை வடக்கி

## ஜனநாயக நீரோட்டத்தை, 'சர்வாதிகாரநீரோட்டமாக்கி' புலி மூழ்கித்தவிக்கின்றது!

சபாநாயகர் அவர்களே! எங்களுக்கு கிடைத்துள்ள புதிய தகவலின்பிரகாரம், சுயாதீனமாக ஒரு ஒலிபரப்பு நிலையமும் நிறுவப்பட்டுள்ளதாம். மோட்டார் வாகனங்களுக்கு புலித்தலைச்சின்னம் பொறிக்கப்பட்ட இலக்கத் தகடுகள்வழங்கப்பட்டுள்ளன.

வடகிழக்கில் மாகாண சபைகள் அமுலில் இல்லை என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆனால் அரசாங்கமோ தமது ஆட்சி அதிகாரங்களை பணிவன்புடன் விடுதலைப் புலிகளுக்குத் தாரைவார்த்துக்கொடுத்திருக்கின்றது. நான்இப்போதுவிபரித்த விஷயங்கள் யாவும் விடுதலைப்புலிகளால்செய்யப்படும் சட்டவிரோதமான செயல்களாகும். இவற்றை எல்லாம் பார்த்துக்கொண்டு அரசாங்கம் கண்ணை மூடிக்கொண்டு பாராமுகமாக இருக்கின்றது.

தான்'' என்பதை ஒப்புக் கொள்ளவேண்டும் என்பதையும் வற்புறுத்துகின்றார்.

புலிகளின் கோரிக்கைகள் முழுவதையும் ஒருபேச்சுக்காக ஒப்புக்கொண்டாலும், அவர்கள் தனிக்கட்சிஆட்சிபுரிவதில் திடமான நம்பிக்கை கொண்டிருப்பதால் நமது முயற்சிகள் யாவும் பயனற்றதாகிவிடும் என்று, தெட்டத்தெளிவாகத் தெரிகிறதல்லவா?

## முஸ்லிம்களைப் பகைத்துக் கொண்டு புலிகள், மூச்சு விடவே முடியாது!

வட கிழக்குப் பிராந்தியங்களின் ஏக அதிகாரிகளாக தமிழ் ஈழ விடுதலைப் புலிகளையே அமர்த்தும் நோக்கத்துடன்பேச்சுவார்த்தைகள்

லும் கிழக்கிலும் நிரந்தரமான சமாதானத்தை எதிர்பார்க்கவே முடியாது! இதை அரசாங்கமும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

# புலிகளுக்கு எங்கள் வேண்டுகோள்!

சென்ற இதழ் தொடர்ச்சி.

வேண்டுமானால், மனிதாபிமான அடிப்படையில் ஆதரவு தெரிவிக்கலாம். தமிழ் சமூகத்துக்காக சிங்கள சமூகம் குரல் கொடுக்கமுடிந்ததா? அதேபோல்தான் முஸ்லிம் சமூகத்துக்காக தமிழ்சமூகமும் குரல் கொடுக்க முடியாது. அதேவேளையில் தமிழ்-முஸ்லிம் உறவு என்ற அடித்தளத்திற்தான் எந்த அரசியல் தீர்வும் சாத்தியப்படும்.

மாகாணசபையை கொடுப்பதையே ஜீரணிக்கமுடியாத சிங்களப்பேரினவாதத்தின் மத்தியில் விடுதலைப்புலிகளின் அரசியல் சாணக்கியமோ - இராஜதந்திரமோ இல்லாத கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றுவதில் ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு இருக்கிற நடைமுறைச் சிக்கல்களை புலிகள் இன்னும் யோசித்துப் பார்ப்பதாகத் தெரியவில்லை.

## 'முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் தீர்க்கதரிசனம் பலித்தது!' தவிசாளர், சேகு இஸ்ஸடீன்

### ஜனாதிபதியின் திடசங்கற்பம்!

மாண்புமிகு ஜனாதிபதி பிரேமதாஸ அவர்கள், இந்த நாட்டின்இனப்பிரச்சினையை பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்த்து வைப்பதில் பெரும் ஆர்வம் கொண்டுள்ளார். வடகிழக்கில் வாழும் சகல சமூகங்களுக்கும் நியாயம் வழங்குவதற்கும் திடசங்கற்பம்பூண்டுள்ளார்.

### முஸ்லிம்-சிங்கள சமூகங்களை விற்கப்போவதில்லை!

சிங்கள மக்களின் இனவாத அபிலாஷைகளுக்காக, தமிழ் சமூகத்தை புறக்கணிக்க அவர் தயாரில்லை. அதேவேளையில் தமிழ் இனவாத அபிலாஷைகளுக்காக வடகிழக்கில் வாழும் முஸ்லிம், சிங்கள சமூகத்தை விற்றுவிடவும் அவர் தயாரில்லை. புலிகள் இதை மிகவும் தெளிவாகவும் சரியாகவும் விளங்கிக்கொள்ளவேண்டும்.

### நடைமுறைச் சிக்கல்

அதிகாரப்பரவலாக்கத்தில் தமிழ் சமூகத்துக்குவடகிழக்கு

### 6வது திருத்தம்

ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்கும் கோரிக்கைக்கு அரசாங்கக்கட்சி நூறுவீதம் ஆதரவளித்தாலும் ஏனைய தமிழ், முஸ்லிம் கட்சிகளும் ஆதரவளிக்க வேண்டிய அவசியம் இருப்பதை விடுதலைப் புலிகள் அறியவில்லையா?

ஏனைய தமிழ், முஸ்லிம் கட்சிகளை, பரம விரோதிகளாக நினைத்துக்கொண்டு இன்னும் அவர்களை அழிப்பதை நிறுத்தாமல் தொடர்ந்துகொண்டு, விடுதலைப்புலிகளின் மானத்தைக் காப்பதற்காக தமிழ் முஸ்லிம் கட்சிகள் ஆதரவாக வாக்களிக்க வேண்டும்! என்று புலிகள், சுயபிரக்ஞையோடுதான் எதிர்பார்க்கின்றீர்களா?

''ஆறாவது திருத்தச்சட்டத்துக்கு ஏனைய முஸ்லிம். தமிழ் கட்சிகள் ஒரு போதும் வாக்களிக்கக்கூடாது!'' என்ற நோக்கத்தோடுதானேபுலிகள் ஏனைய தமிழ் முஸ்லிம் கட்சியினரை கொலை செய்கின்றீர்கள்?

-மறுபக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் உலகம்

### உலகளாவிய இஸ்லாமிய, வெகுஜனத் தலைமைத்துவம்

# உலக முஸ்லிம் விடுதலைக்கு ஆதரவு!

உலகளாவிய இஸ்லாமிய தலைமைத்துவத்தின் இரண்டாவது மகாநாடு அண்மையில் லிபியா - திரிப்பொலியில் நடைபெற்றது. அங்கு பங்சாமோறோ மக்களின் உரிமைப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பிலிப்பைன்ஸால் கபளீகரம் செய்யப்பட்ட மின்டானோ பகுதி முஸ்லிம்களின் ''ஜிஹாத் - பீசபீலில்லாஹ்'' என்ற, அமைப்பை, பலரும் வரவேற்றுப் பேசியதோடு, இந்த மக்களின் போராட்டத்துக்கு இஸ்லாமிய உலகம் ஆதரவு வழங்கவேண்டும் என்றும் அழைப்பு விடுக்கப்பட்டது.

இந்த சர்வதேச மகாநாடு' பலஸ்தீன மக்களினதும், ஆப்கன் முஜாஹிதீன்களினதும், காஷ்மீர் முஸ்லிம்களினதும் உரிமை, போராட்டத்திற்கும் அவர்களின் விடுதலைக்கும் வரவேற்பும் வாழ்த்தும் கூறியது. இந்தமகாநாடு வீரம்செறிந்த லிபியமக்களையும், துணிச்சல் மிகுந்த முஅம்மர் கத்தாபியின் தலைமைத்துவத்தையும் வரவேற்றது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வேட்கையையும், கிறீக் முஸ்லிம்களுக்கெதிரான அந்த அரசின் பயங்கரவாதத்தையும், மேற்குலகத்தின் முஸ்லிம்களுக்கு எதிரான சதிமுயற்சிகளையும் சூடானுக்கு எதிரான சர்வதேச சூழ்ச்சிகளையும், இலங்கை முஸ்லிம்களுக்கு இழைக்கப்படும் அநியாயங்களையும், இந்தியா, யூகோஸ்லேவியா, ரஷ்ய போன்ற நாடுகளில் வாழும் முஸ்லிம்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளையும் ஆசிய, ஆபிரிக்க கரீபியன் தீவு மக்களுக்கு இழைக்கப்படும் அக்கிரமங்களையும் இந்த மகாநாடு அதிக சிரத்தையுடன் கவனத்தில் எடுத்து தமது கண்டனத்தையும் தெரிவித்தது.

புரட்சித்தலைவர்.முஅம்மர் கத்தாபி இந்த மகாநாட்டை ஆரம்பித்துவைத்து, அதிமுக்கியத்துவம் வாய்ந்த பிரசங்கம் நிகழ்த்தினார். முஸ்லிம் உலகை எதிர்நோக்கியுள்ள பேரபாயங்களைஅகற்றும்வழிமுறைகளையும் விளக்கிக் கூறினார்,

மோறோ தேசிய விடுதலை இயக்கத் தலைவர். சகோ. நூர்மிஸூரி உட்பட, 39சர்வதேச முஸ்லிம் நிறுவனங்களைச் சேர்ந்த உலகளாவிய இஸ்லாமிய வெகுஜன தலைமைத்துவத்தின் பொதுச் செயலகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

சர்வதேச இஸ்லாமிய அழைப்பு நிறுவனத்தைச் சேர்ந்த சகோ. டாக்டர். முஹமது அஹமது அல்ஷெரிப் அவர்கள் மேற்படி தலைமைத்துவத்தின் செயலாளர் நாயகமாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

## இலங்கைக்கு உதவ அரபு நாடுகளுக்கு வேண்டுகோள்! லிபிய, கலாநிதி அல்ஷரீப்

''முஸ்லிம் அரசாங்கங்களையும்அரபு நாடுகளையும்பொருளாதார ரீதியாக இலங்கைக்கு உதவவேண்டுமென இஸ்லாமிய நாடுகள் நிறுவனம், அரபுலீக் ஆகிய சர்வதேச அமைப்புகளை வேண்டுவதுடன் அவைகளின் ஒத்துழைப்புடன் பொருளாதார அபிவிருத்தி திட்டங்களை வலுப்படுத்திக்கொள்ள என்னாலான சகல பிரயத்தனங்களையும்செயல்படுத்துவேன்'

இவ்வாறு உலக இஸ்லாமிய வெகுஜன தலைமைத்துவத்தின் செயலாளர் நாயகமும், உலக இஸ்லாமிய அழைப்பு நிறுவனத்தின் பிரதம செயலாளர் நாயகமுமானகலாநிதி முஹம்மது அஹமது அல்ஷரிப் தம்மை சந்தித்த ''பாமிஸ்'' தூதுக்குழுவினரிடம் உறுதியளித்துள்ளார். சர்வதேச இஸ்லாமிய அழைப்பு நிறுவனத்தின் மூன்றாவது, தென்கிழக்காசிய கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக அண்மையில் கலாநிதி அஹமது அல்ஷரிப் இலங்கைக்கு வந்திருந்தார் இக்கருத்தரங்கு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில்நடைபெற்றது'

கலாநிதி அல்ஷரிப், தூதுக்குழுவினரிடம் பேசுகையில் ''குறிப்பாக சர்வதேச அமைப்புகளான இஸ்லாமிய நாடுகள் நிறுவனம் (ஓ.ஐ.சி) அரபுலீக், செஸ்கோ' அலாஸ்கோ ஆகியவற்றினூடாகவும் அரசாங்க மட்டத்திலும் தொடர்புகொண்டு, பாரிய பொருளாதார ஒத்துழைப்பும் உதவிகளும் பெற்று, இலங்கையின் பொருளாதார மேம்பாட்டை வலுப்படுத்திக் கொள்ள உதவுவேன்'' என்று, தெரிவித்தார்.

''இஸ்ரேல் நலம் காக்கும் பிரிவை மூடிவிட்டதன் மூலம் தெட்டத்தெளிவான தனது ஆதரவை முஸ்லிம் நாடுகளுக்கும், குறிப்பாக பலஸ்தீன மக்களுக்கும் இலங்கை வழங்கியுள்ளது. எனவே தாங்கள் வகிக்கும் உயர் பதவியின் துணையோடு, தங்களால் முடிந்த அனைத்து உதவிகளையும் இலங்கைக்குபெற்றுத்தர ஆவன செய்ய வேண்டும்'' என,பாமிஸ் தூதுக்குழுவினர் கலாநிதி. அல்ஷரிப் அவர்களை வலியுறுத்திக்கேட்டுக் கொண்டனர்.

### ராபிதாகுழு-பெனுசிர்சந்திப்பு!

உலக முஸ்லிம் அமைப்பின் செயலாளர் நாயகம். கலாநிதி அப்துல்லா உமர் நஸீப் அவர்களின் தலைமையில் அரபுலகப் பிரமுகர்கள் தூதுக்குழுவொன்று, அண்மையில் பாகிஸ்தான் பிரதம மந்திரி திருமதி. பெனாஸிர் பூட்டோவை இஸ்லாமாபாத்தில் சந்தித்து காஷ்மீர் முஸ்லிம் மக்களின் போராட்டத்துக்கான தமது ஆதரவையும் ஆப்கானிஸ்தான் பிரச்சினை தொடர்பாக பாகிஸ்தான் எடுத்துவரும் பிரயத்தனங்களுக்கான தமது பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொண்டனர்.

## மைக்கல்ஜாக்சனும் தம்பியும் இஸ்லாத்தை தழுவினார்கள்!

அமெரிக்க திரைப்படகலைஞர் மைக்கல் ஜாக்சன் இஸ்லாத்தை தழுவியுள்ளார். ஹொலிவூட்டிலிருந்து கிடைத்த தகவலின் பிரகாரம் திரு.ஜாக்சன் கடந்த செப்டம்பர் மாதத்திலிருந்து முஸ்லிமாகிவிட்டார். என்று அமெரிக்க சஞ்சிகையான 'வுமன் ருடே'' செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தசெய்தியை ''நெஷனல் இன்குயறர்''சஞ்சிகையும், ''ஜர்னல் டி மொன்றீல் என்ற'' கனேடிய சஞ்சிகையும் ஊர்ஜிதம் செய்திருக்கின்றன.

ஜாக்சன் கருத்து வெளியிடுகையில், ''நான் உண்மையான மகிழ்ச்சியை அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்' ஆயினும் திரைப்படங்களில் நடிப்பது பற்றி எதையும் குறிப்பிட விரும்பவில்லை. என்று தெரிவித்திருக்கிறார்.

இருபது மில்லியன் டொலரில் ஒரு பள்ளிவாசலை நிர்மாணிக்க ஜாக்சன் திட்டமிட்டுள்ளதாகவும், ஜாக்சனின் சகோதரரான பொப்பாடகர் ஜெர்மெய்ன் ஜாக்சனும் 1989 ஜூன் மாதம் ஜித்தா இஸ்லாமிய நீதிமன்றத்தின் முன்னிலையில் இஸ்லாத்தில் சேர்ந்துவிட்டதாகவும் ''வுமன் ருடே'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## பணநோட்டுக்களில் அல்லாஹ்வின் திருநாமம்!

வங்காளதேச மத்தியவங்கி வெளியிட்டுள்ள பண நோட்டுக்களில் 'அல்லாஹு அக்பர்' என்ற, அரபு வாக்கியம் இடம் பெற்றிருப்பது இஸ்லாமிய சட்டத்துக்கு முரணாக இருப்பதால் அந்த நோட்டுக்கள் அனைத்தையும் பாவனையில் இருந்து வாபஸ் பெறுமாறு அங்குள்ள இஸ்லாமியக் குழுக்கள் அரசாங்கத்தைக் கேட்டுள்ளன.

புதிய 10 டாகா பெறுமானமுள்ள இந்த பண நோட்டில் அல்லாஹு அக்பர் என்று அரபு மொழியும் வங்காள மொழியும்இடம்பெற்றுள்ளது

ஏற்கனவே பள்ளிவாசல்களைத் தாங்கிய படங்கள் பண நோட்டுக்களில் இடம் பெற்றிருந்த போதிலும், இவ்வாறான அரபு வாக்கியம் தாங்கிய பண நோட்டுக்கள் வெளிவந்திருப்பது இதுவே முதற்தடவையாகும்.

இஸ்லாமிய கல்வி ஆராய்ச்சி கவுன்ஸிலின் தலைவர் சட்டத்தரணி. ஷம்சுத்தெளலா வெளியிட்டுள்ள அறிக்கையில் ''அல்லாஹு அக்பர் '' என்ற,அரபுவாக்கியத்தைப் பண நோட்டுக்களில் இடம்பெறச் செய்தமை, இஸ்லாமிய ஷரீஅத் சட்டத்தை அவமதிக்கும் செயலாகும் என்று தெரிவித்துள்ளார்.

''பணநோட்டுக்களை புழங்கும் சாதாரண மக்களுக்கு 'அல்லாஹு அக்பர்' என்ற, புனித வார்த்தையின் மகத்துவம் தெரியாதாகையால் அவர்கள், அதனை கண்ணியப்படுத்தமாட்டார்கள்'' என்றும் காரணம் கூறப்படுகின்றது.

## ஈராக்குடன் பரஸ்பர ஒத்துழைப்பு! பக்தாதில் அரபுகளின் மகாநாடு!

ஜனாதிபதி சதாம் ஹுசைனின் பணிப்புரையின் கீழ் ஈராக்குடன் பரஸ்பரம் ஒத்துழைப்பதற்கான அரபு வெகுஜன மகாநாடு அண்மையில்பக்தாதில் நடைபெற்றது.

இந்த மகாநாட்டில் அரபுலகின் முக்கிய தலைவர்களும் அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு ''எமது வலிமை ஐக்கியத்திலும், எமது பலவீனம் வேற்றுமையிலும் தங்கியுள்ளது'' என்னும் தொனிப்பொருளை மையமாகவைத்து கருத்துரை வழங்கினார்கள்.

முன்னர் எப்பொழுதும் விரிவான அடிப்படையில் நிகழ்ந்திராதஇந்தமுக்கியத்துவம் வாய்ந்த மூன்று நாள் மகாநாடு,அரபு வெகுஜனங்களின் பரஸ்பர ஒத்துழைப்பை வலியுறுத்துவதை அடிநாதமாகக் கொண்டு - ஈரான் நாட்டுக்கு எதிரான இஸ்ரேல்-பிரிட்டன் அமெரிக்க நாடுகளின் பிரசாரத்தை எதிர்கொண்டு முறியடிக்க ஈராக் மக்களோடு இணைந்துசெயல்படுவதாகும் என்று தெரியவருகிறது.

காழ்ப்புணர்வோடு முன்னெடுத்துச் செல்லப்படும் இந்த நாடுகளின் பிரசாரம், ஈராக்கை அவமதிப்புக்குள்ளாக்குவதிலேயே குறியாக இருப்பதோடு - சர்வதேச அந்தஸ்திலிருந்தும், தொழில் நுட்பரீதியிலான வெற்றிகளிலிருந்தும்ஈராக்கைத்தடுப்பதுவும் இந்த நாடுகளின் நோக்கம் எனவும் இந்த மகாநாட்டின் ஏற்பாட்டுக்குழுவைச் சேர்ந்த அதிகாரிஒருவர்தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில், ஈராக்குக்கு எதிரான இந்த நாடுகளின் பிரசாரம் உச்சநிலையை அடையும் போதும் ஈராக்கின் விஞ்ஞான நிலையங்களைத்தாக்க சியோனிசநாடுகள் அச்சுறுத்தலை மேற்கொள்ளும்போதும் இந்த மகாநாடு மீண்டும் கூடும் என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டிருக்கின்றார்.

இதற்கிடையில் இந்தமகாநாட்டில் பங்குகொள்வதற்காக பக்தாத் வந்து சேர்ந்துள்ள பிரதிநிதிகள், இவ்வாறான அபகீர்த்தி ஏற்படுத்தும் பிரசாரத்தை வன்மையாகக் கண்டித்துள்ளனர். மேலும் ஈராக்குக்கு தமது முழு ஆதரவையும் வழங்கி அதன் குறிக்கோள்களைப் பாதுகாப்பதிலும் அரபுலகின் பெறுமானத்தைக் காப்பதிலும் தீவிரம் காட்டவேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள்.

ஈராக் மக்களோடு - அதன் தலைமையும் எதிர்கொள்ளும் அமெரிக்கா சியோனி நாடுகளின் பிரசாரம், ஈராக்கை மட்டுமல்ல முழு அரபுலகையுமே இழிவுபடுத்துவதை இலக்காகக் கொண்டுள்ளது. அதை முறியடித்து எங்களின் ஒத்துழைப்பைப் பிரகடனப் படுத்திக்கொள்ளவே நாம் இங்கு வருகை தந்துள்ளோம் என்று அரபு சட்ட சம்மேளன செயலாளர் நாயகம் சகோ. பாறூக் அபூ ஈஸ்ஸா தெரிவித்திருக்கிறார்.

### கொமெய்னியின் படைப்புகள் இருபது மொழிகளில் வெளியிடப்படும்!

இமாம் கொமெய்னியின் படைப்புகளைத் தொகுத்து வெளியிடும் நிறுவனத்தின் தலைவரானசகோ.முஹம்மது அலி அன்சாரி காலஞ்சென்ற ஆன்மீகத் தலைவர். இமாம் கொமெய்னியின் படைப்புகள் பிரசுரங்களை இருபது மொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்து வெளியிடப்படவிருக்கின்றன என்று அறிவித்திருக்கிறார்.

மலந்தாரன்மாகாணத்தின் தலைநகரான சாரியில்மத்திய செய்தி நிறுவனத்தால் அவர் பேட்டிகாணப்பட்ட போது ''இமாம் கொமெய்னியின் சகல இலக்கிய சிருஷ்டிகளும் இஸ்லாமிய சட்டநூல்களும், தத்துவம், அரசியல அனைத்தும் தொகுக்கப்பட்டு கலாசாலை மாணவர்களும், ஆன்மீக கல்வி நிலையங்களும் பயன் பெறும் வகையில் இருபது மொழிகளில் மாற்றம் செய்யப்பட்டு வெளியிடப்படவிருக்கின்றன'' என்று தெரிவித்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனு. பழையநகர் முஸ்லிம்களை இடம் பெயர்க்க நிர்ப்பந்தம் வேண்டாம்!

**மக்கள் மத்தியில்**

## இராஜாங்க அமைச்சரிடம் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் முறையீடு!

கடந்த நூறு ஆண்டுகளுக்கு மேலாக அனுராதபுரம் பழைய நகரிலே வாழ்ந்துவரும் முஸ்லிம்களை அங்கிருந்து வெளியேறுமாறு நிர்பந்திக்கக் கூடாது. அவர்கள் தொடர்ந்தும் தமது வீடுகளில் வசிப்பதற்கான உத்தரவாதத்தை அரசாங்கம் வழங்கவேண்டும். இவ்வாறு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் திகாமதுல்லமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சகோதரர் எம். எச். எம். அஷ்ரஃப் அண்மையில் கொள்கைதிட்டமிடல் இராஜாங்க அமைச்சர் திரு. நிமால் விக்கிரமசிங்ஹ அவர்களிடம் நாடாளுமன்றத்தில்வைத்து கோரிக்கை விடுத்தார்.

சகோதரர் அஷ்ரஃப் இராஜாங்க அமைச்சரிடம் பின்வரும் தகவல்களைத் தெரிவித்தார்.

புனித நகரமாக்கும் திட்டத்தின் கீழ் ஒரு குறிப்பிட்ட சமூகத்தை சேர்ந்தவர்களை வெளியேற்றுவது நியாயமற்றதும், மனிதாபிமானமுறைக்கு மாறானதுமாகும். அனுராதபுரம் மாவட்டத்தில் வாழும் முஸ்லிம்கள் சிங்கள மக்களுடன் சமாதானம் சௌஜன்யமாக வாழ்ந்து வருகின்றனர்.

சமூகத்தின் மத்தியில் ஒற்றுமையுடன், இனஉறவுகளையும் வளர்ப்பதற்கு கௌரவ ஜனாதிபதி அவர்கள் உழைத்துக் கொண்டிருக்கும் கால கட்டத்தில் அனுராதபுரம் முஸ்லிம்களைத் தமது பாரம்பரிய இடங்களை விட்டு வெளியேற்ற வேண்டும் என்ற நடவடிக்கை, அரசாங்கத்தின் மீது முஸ்லிம்கள் வைத்திருக்கும் நம்பிக்கைக்கு ஊறு விளைவிக்கும்.

ஆகவே முஸ்லிம்களுக்கு அவர்கள், தொடர்ந்தும்தமது இடங்களில்வாழலாம் என்ற உத்தரவாதத்தை அரசாங்கம் வழங்கவேண்டும். முஸ்லிம் காங்கிரஸின் தலைவரின் வேண்டுகோளுக்கு செவிமடுத்த இராஜாங்கஅமைச்சர் அனுராதபுரம் பழைய நகர முஸ்லிம்கள் பயம் கொள்ள வேண்டிய அவசியமில்லை என்றும், அவர்களின் பிரச்சினை நீதியாகவும், நியாயமாகவும் தீர்க்கப்படும் என்றும், எக்காரணம் கொண்டும் முஸ்லிம் சமூகத்துக்கு அதிருப்தி ஏற்படும் வகையில் இப். பிரச்சினை தீர்க்கப்படமாட்டாது. என்றும்சகோ. அஷ்ரஃப் அவர்களுக்கு வாக்குறுதியளித்தார்.

## மூதூரில் போக்குவரத்து சீர்குலைவு!

"கடந்த பல ஆண்டுகளாக வடக்கு-கிழக்குப் பிராந்தியத்தில் நிலவிய வன்செயல் காரணமாக மூதூர் பகுதியின் சகல போக்குவரத்துப் பாதைகளும் படுமோசமான நிலையில்தான் காணப்படுகின்றன. எனவே தங்களின் அமைச்சு மூலம் மூதூர் பாதைகளைப் புனரமைக்க நடவடிக்கை மேற்கொள்வதோடு கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மூதூர் துறைமுகத்தையும் திருத்தி அமைக்க நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொள்கின்றேன்."

இவ்வாறு, போக்குவரத்து ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் யு. எஸ். எம். பாறூக் அவர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் திருகோணமலை மாவட்ட மாகாணசபை உறுப்பினர் சகோ. எம். எச். எஸ் ஹாஜா குறிப்பிட்டுள்ளார்.

மேலும் "மூதூர் போக்குவரத்துச்சபை டிப்போவில் பஸ் சாரதிகளும் நடாத்துனர்களும் பற்றாக்குறையாக உள்ளது என்றும் எனவே, இந்த பற்றாக் குறையை நிவர்த்தி செய்ய இப்பகுதியிலிருந்து அதற்கான ஆட்களைத் தெரிவு செய்ய உரிய நடவடிக்கை எடுக்குமாறும் அந்தக் கடிதத்தில் கேட்டிருக்கின்றார்.

## பொலிஸ்படைக்கு ஆட்சேர்ப்பதில் பாரபட்சம்!

"அண்மையில் வடககு கிழக்கு மாகாணத்தில் இருந்து பொலிஸ் படைக்கு ஆட் சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சை திருகோணமலையில் நடைபெற்றது இதில் முழுமையான தகுதிகள் பெற்றிருந்த முஸ்லிம் இளைஞர்கள் எவ்விதமான நியாயமான காரணமுமின்றி நிராகரிக்கப் பட்டுள்ளனர். குறிப்பாக, திருகோணமலை மாவட்டத்தில் மூதூர், கிண்ணியா, தோப்பூர், முள்ளிப் பொத்தானை, புல்மோட்டை போன்ற பிரதேசத்தைச் சேர்ந்த முஸ்லிம் வாலிபர்கள் தகுதிபெற்றிருந்தும் சேர்த்துக்கொள்ளப்படாமல் பின்தள்ளப்பட்டுள்ளனர்.

அம் மாவட்டத்தின் முஸ்லிம்களின் இன விகிதாசார அடிப்படையிலாவது ஆட்சேர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. எனவே தாங்கள் இது விஷயத்தில் கவனமெடுத்து உடனடியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்"

இவ்வாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவுக்கு அனுப்பி வைத்துள்ள அவசரக்கடிதத்தில் திருமலைமாவட்ட மாகாணசபை உறுப்பினர் சகோ. எம். எச். எஸ். ஹாஜா கேட்டிருக்கிறார்.

## கணேவல்பொல பிரதேசத்துக்கு மின்சாரம்!

### சகோ.புஹார்தீன் எம்.பி.நிதி ஒதுக்கீடு!



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய பட்டியல் உறுப்பினர் சகோ. என். எம். புஹார்தீன் அவர்களின் 1989 ஆம் வருடம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள கனேவல்பொல பிரதேசத்திற்கு மின்சார வினியோகத்திட்டத்துக்கும்' அனுராதபுரம் மேற்குத் தொகுதியில் க. இஹலகொட்டியாவ முஸ்லிம் வித்தியாலயத்தின் கட்டிடத்திற்கு நிரந்தரக் கூரை அமைப்பதற்குமாக நிதி வழங்கப்பட்டுள்ளது.

இத்தகவலை அனுராதபுர மாவட்ட அமைப்பாளர் சகோ. எஸ். வி எஸ். இப்றாஹிம் கூறினார். இவ்வேலைத் திட்டங்கள் மிக விரைவில் பூர்த்தி செய்வதற்கான அனைத்து வேலைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நுவரெலியா மாவட்டத்துக்கு ஒரு தேசியப் பாடசாலையாவது வேண்டும்!

நுவரெலியா மாவட்டத்திலுள்ள ஒரேயொரு முஸ்லிம் மஹா வித்தியாலயம் ஹபுகஸ்தலாவையிலுள்ள அல்-மின்ஹாஜ் மஹா வித்தியாலயமாகும். விஞ்ஞான ஆய்வுகூடம், மனையியற்பிரிவு, தெசவுபிரிவு, உலோகவேலைப்பிரிவு, வாசிகசாலை விளையாட்டரங்கு என சகல வசதிகளையும் ஊர்மக்களது நெடுங்கால முயற்சிகளின் பயனாக மேற்படி மஹா வித்தியாலயம் பெற்றுள்ளது.

இத்தகைய வசதிகளுள்ள ஒரு பாடசாலையை ஒரு தேசிய பாடசாலையாக மாற்றுவதில் அரசாங்கத்துக்கு அதிக சிரமம் இருக்காது. நுவரெலியா மாவட்ட முஸ்லிம்களுக்குரிய தேசியப் பாடசாலையாக இது மாற்றப்படவேண்டும் என்று மாவட்டமுஸ்லிம்கள் அவாவுற்றிருந்தனர். அரசாங்கத்தை கோரியுமிருந்தனர்.

தற்போது சுமார் 1500 மாணவர்களையும் ஐம்பது ஆசிரியர்களையும் கொண்ட கலவன் பாடசாலையாக இயங்கும் மேற்படி மகாவித்தியாலயம், நுவரெலியா மாவட்டம் முழுவதிலுமிருந்து வரக்கூடிய 2500 மாணவர்களுக்கு உயர்கல்வி வழங்கக் கூடிய வாய்ப்புகளைக் கொண்டுள்ளது.

தற்போது கலப்பிட்டிய, பூண்டுலோயா, கொரகோயா, பொல்வதுற. நாவலப்பிட்டி, அஹஸ்வெவ, போன்ற பகுதிகளிலிருந்து வந்து இங்கு கல்வி பயிலும் மாணவர்கள், உயர் கல்விக்காக வேறு இடங்களுக்குப் போகவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இம் மஹா வித்தியாலயத்தில் முஸ்லிம்கள் நம்பிக்கையிழக்கும் நிர்ப்பந்த நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இனங்களுக்கிடையில் பாரபட்சமின்றி சேவைகளை வழங்குவோம் எனச் சொல்லிக்கொள்ளும் அரசு, இம் மாவட்ட முஸ்லிம்களின் நியாயமான உரிமையைத் தானும் நிராகரிக்கிறமை பாரதூரமான பாரபட்சமாகும்.

இது தொடர்பாக நுவரெலியா மாவட்ட முஸ்லிம்கள் குறிப்பாக ஹபுகஸ்தலாவை நாவலப்பிட்டி முஸ்லிம்கள் தலைவர் எம். எச். எம் அஷ்ரஃப் அவர்களுக்கு புகார் செய்துள்ளனர். தலைவர் அஷ்ரஃப் அவர்கள் தன்னாலியன்ற அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதாக ஹபுகஸ்தலாவ இளைஞர் கழகத்துக்கு அறிவித்துள்ளார்.

முஸ்லிம்களின் மேற்படி புகாரையடுத்து ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய கொள்கை பரப்புச் செயலாளரும் அரசியல் அதிஉயர் பீட உறுப்பினருமான சகோ. கவிஞர் மருதூர்க்கவி அவர்களின் தலைமையில் ஒரு தூதுக்குழு ஹபுகஸ்தலாவைக்குச் சென்று மேற்படி முஸ்லிம் மஹா வித்தியாலயத்தைப் பார்வையிட்டதோடு, காஹிரா முஸ்லிம் வித்தியாலய அதிபர் சகோ, யூ. எல். மஸீஹுத்தீன் அவர்களது இல்லத்தில் பல கல்விமான்களையும், ஊர் பிரமுகர்களையும் சந்தித்து கலந்துரையாடி உரிய நடவடிக்கை மேற்கொள்ளத் தேவையான விவரங்களை [illegible]

## உன்னதமான சமுதாயத்தை நிர்மாணிப்பதற்காக முஸ்லிம்கள் ஐக்கியப்பட வேண்டும்!

### சகோ.எம்,எச்,எம், அஷ்ஃரப் எம்,பி

"கடந்த நாற்பது ஆண்டு காலமாக இந்த இலங்கை மண்ணில் அடிமைகளாக, ஊமைகளாக, அனாதைகளாக கேவலமான நிலையில் முஸ்லிம் சமுதாயம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. இந்த அவல நிலையை மாற்றி அரசியல் விழிப்புணர்ச்சியும், எழுச்சியும் கொண்ட ஒரு உன்னதமான சமுதாயத்தை நிர்மாணிப்பதற்காகத்தான் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்டது.

பெரும்பான்மை சிங்கள பௌத்தர்களின் நலன்களும் பாதுகாப்புமே ஆட்சியிலுள்ள அதிகார வர்க்கத்தால் பேணப்பட்டு வந்துள்ளன சிறுபான்மை மக்களின் நலன்கள், உரிமைகள், பாதுகாப்பு அனைத்தும் புறக்கணிக்கப்பட்ட நிலையில்தான் [illegible]டித்து வருகின்றன. இந்த மோசமான நிலைமை மேலும் தொடரத்தான் வேண்டுமா?

அண்மையில் லிபியா-திரிபோலியில் நடந்த உலகளாவிய இஸ்லாமிய வெகுஜனத் தலைமைத்துவத்தின் மகாநாட்டில் அதன் உதவிச் செயலாளர் நாயகமாகவும், நிறைவேற்றுக்குழு உறுப்பினராகவும், ஆசியப் பிராந்தியப் பொறுப்பாளராகவும் முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவர் சகோ. அஷ்ரப் தெரிவு செய்யப்பட்டார். அதைப் பாராட்டுமுகமாக கம்பளை இலவத்துறையில் அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அல் ஹாஜ் எஸ். எம். யாஸின் அவர்களின் தலைமையில், நடைபெற்ற இந்த வைபவத்தில் அவர் மேலும் பேசுகையில் "நாம் வெறும் வார்த்தை அளவில்

7பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திட்டமிட்ட, சட்டவிரோத வெளியார் குடியேற்றம்!

# நீதிமன்ற தீர்ப்பும் நிராகரிப்பு!

## ஒலுவில்-பொன்னன்வெளிவிவசாயிகளின் நிலங்கள் பறிக்கப்பட்டன!ஜனாதிபதியிடம் தலைவர் முறையீடு!

அட்டாளைச்சேனை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட ஒலுவில் கிராமத்தைச் சேர்ந்த இரு நூறு விவசாயிகளுக்கு சொந்தமான 'பொன்னன்வெளி' கண்டத்தில் அமைந்த நெற்காணிகள் பெரும்பான்மை இனத்தவரால் பலவந்தமாக பறிக்கப்பட்டது. இதனால் இந்த விவசாயிகளின் அன்றாட வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த விவசாயிகள், பல ஆபத்துக்களைஎதிர்கொண்டு காடுவெட்டி, நிலம் திருத்தி அதை விளையும் பூமியாக மாற்றி, அதில், பரம்பரை பரம்பரையாக விவசாயம் செய்துவருகின்றனர்.

1948ஆம் ஆண்டில், காடுவெட்டி துப்பரவு செய்யப்பட்டு விவசாயத்தை மேற்கொண்ட இந்த நிலங்களுக்கு ஆரம்பத்தில் கல்லோயா அபிவிருத்தி சபை பேர்மிட்டுகளை வழங்கியது. இதன் பின்னர், அரசாங்க அதிபரும் அதே காணிகளுக்கு பேர்மிட் வழங்கியிருக்கிறார்.

42 வருடங்களுக்கு மேலாக பாடுபட்டு உழைத்து உருவாக்கப்பட்ட இந்த நிலங்களுக்கு வரிப்பணம் செலுத்தியிருப்பதோடு, காணி விவசாய பதிவேட்டிலும் இந்த விவசாயிகளின் பெயர்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

1987ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, அம்பாறை அரசாங்க அதிபரின் சட்டவிரோதமான தலையீட்டின் காரணமாக இப்போது இந்த நிலங்கள் பறிக்கப்பட்டுள்ளன!

அரசாங்கத்தின் திட்டமிட்ட வெளியார் குடியேற்றத்துக்காக இந்தக் காணிகள் சுவீகரிக்கப் பட்டிருக்கின்றன. இந்த விவசாயிகள் இன்று தம் காணிகளை இழந்து நடுத்தெருவில் விடப்பட்டிருப்பதோடு திகாமடுல்ல மாவட்டத்தின் எரியும் அரசியல் பிரச்சினையாகவும் இது தலைதூக்கியுள்ளது!

இன்றுவரையும் குறிப்பிடப்படும் இந்த நிலங்கள் சாகுபடி செய்யப்படாத நிலையிலேயே காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

அரசாங்க அதிபர், இந்த விவசாயிகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார் எனினும் ''இந்த விவசாயிகளை பலாத்காரமாக வெளியேற்ற முடியாது''என்று, நீதிபதி தீர்ப்பும் வழங்கினார்.

எனவே, இந்த விவசாயிகளின் நியாயமான இந்தக் கோரிக்கைகளை கவனத்தில் எடுத்து, குறிப்பிட்ட இந்த காணிகளை இதே விவசாயிகளுக்கு வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகளைமேற்கொள்ளுமாறு மாண்புமிகு ஜனாதிபதி அவர்களுக்கு அனுப்பியுள்ள அவசர கடிதத்தில் தலைவர் சகோ. அஷ்ரஃப் கேட்டிருக்கிறார்.



## புலிகள் சப்பிய, ஓட்டமாவடி 'கொமெய்னி'

முஸ்லிம் காங்கிரஸ ஆரம்பகால உறுப்பினராகவும் முஸ்லிம் சமூகத்தின் விடுதலைக்காக முழுநேர ஊழியராகவும் உழைத்தவருமான ஓட்டமாவடி அல்ஹாஜ் வி,எம்'இப்றாஹிம் அவர்களை பாஸிஸப் புலிகள் சுட்டுக்கொன்று, சப்பிவிட்டனர். அதன்பின்புஅவர்கள்,

''இலங்கைப் படைக்கு உதவியதற்காக உனக்கு மரண தண்டனை வழங்கப்படுகிறது.'' என்று, கூறிவிட்டு, ,சகோ. முபாறக் அவர்களை, பிடித்து, துடிக்கப்பதைக்க டயரில் போட்டுக்கொழுத்தியிருக்கின்றனர்! அத்துடனில்லாமல் மேலும், ஐந்து இளைஞர்களை கடத்தி சுட்டுக்கொன்றிருக்கின்றனர்.

முஸ்லிம் சமூகத்தின் விடுதலைப்பாதையில் பீசபீல் ஷஹீதான தியாகிகளின் வரிசையில், ஓட்டமாவடி மக்களால் ''கொமெய்னி'' என்று, அழைக்கப்பட்ட அன்னாருக்கும் சகோ.முபாறக் அவர்களுக்கும் ஷஹீதான ஏனையவர்களுக்கும் அல்லாஹ் சுவனபதியை திறந்து வைப்பானாக!அதேவேளை,இவர்களைஇழந்துதுயரினால் துடிக்கும் அவர்களின் குடும்பத்தினர், உறவினர், நண்பர்களுக்கு எங்களது இதயத்தின் ஆறுதலையும் சலாத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம். ஆசிரியர்,

## உன்னதமான.....

6ம் பக்கத் தொடர்ச்சி

மாத்திரமே முஸ்லிம் என்ற பெயரோடு வாழ்கின்றோமே தவிர,உண்மையான முஸ்லிம்களாக முன்மாதிரியான சமுதாயமாக நாம் வாழவில்லை கட்சிகளால், மத்ஹபுகளால் தரீக்காக்களால், இமாம்களால் இன்னும் நாம்பிளவுபட்டிருக்கிறோம்.

எம்மிடையில் ஐக்கியம் போஷிக்கப்படவில்லை. புரிந்துணர்வு வலுப்பெறவில்லை. நல்லெண்ணம் மதிக்கப்படவில்லை, இந்த நிலை இன்னமும் தொடரத்தான் வேண்டுமா?

எனவே, நாம் ஆழமான இஸ்லாமிய ஒருமைப்பாடு மிளிர செயற்படவேண்டும், சமூகத்தில் மலிந்து கிடக்கும் பிணிகளுக்கு பரிகாரம் தேடும் முயற்சிகளில் ஈடுபடவேண்டும்.

''முஸ்லிம்களே! அல்லாஹ்வின் வேதமென்னும் கயிற்றைப் பலமாகப் பற்றிப்பிடித்துக்கொள்ளுங்கள்'' என்று, தான் அல்குர்ஆன் கூறுகின்றது. ஆனால், நம் முன்னால் இன்று நடப்பதென்ன? அனைத்தும் முரண்பாடுகளே. எனவே, வேறுபாடுகளை மறந்து சமூக விடுதலைக்காக முன்னின்று உழைக்க ஐக்கியமாகியேதீரவேண்டும்''என்று, தலைவர் குறிப்பிட்டார். இவ்வைபவத்தில் அம். மாவட்ட மாகாண சபை உறுப்பினர்! சகோ. ஏ. எல்.அப்துல் மஜீத், ஓட்டமாவடி இஷ்ஹாக் மவ்லவி ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

## பயிலுனர் ஆசிரியர் நியமனங்களில் முஸ்லிம்கள் புறக்கணிப்பு!

### மத்திய மாகாண சபை உறுப்பினர் சகோ. அத்ஹம் பலத்த கண்டனம்!

''மாத்தளை மாவட்டத்தில் முஸ்லிம் பாடசாலைகளில் 62 ஆசிரியர்கள் வெற்றிடம் காணப்படுகின்றது. ஆயினும் அண்மையில் இடம்பெற்ற பயிலுனர் ஆசிரியர்தெரிவின் போது மூன்று பேருக்கு மாத்திரமே நியமனம் வழங்கப்பட்டது. இது மிகவும் பாரபட்சமான புறக்கணிப்பாகும்.''

மத்திய மாகாண சபையின் 2வது தொடர்கூட்டம் தொடர்பாக, ஆளுனரின் கொள்கைப்பிரகடன உரையின்மீது கண்டி குயின்ஸ் ஹோட்டல் மண்டபத்தில் நடைபெற்ற விவாதத்தின் போது, மத்திய மாகாண சபையின் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் சகோ. ஐ. எம் அத்ஹம் மேற்கண்டவாறு கண்டனம் தெரிவித்தார்.

அவர் மேலும் உரை நிகழ்த்துகையில் ''இந்த நாட்டில் வாழும் சகல மக்களும் சமமான உரிமைபெற்று வாழ வேண்டியவர்கள். குறிப்பாக இந்த நாட்டில் வாழும் முஸ்லிம்கள் அனைவரும் ஏனைய சமூகங்களோடு இணைந்து ஐக்கியமாக வாழவே ஆசைப்படுகிறார்கள். முஸ்லிம் காங்கிரஸின் கொள்கையும் இது தான். ஆனால் முஸ்லிம்களுக்கு பாரபட்சம் காட்டப்படுகின்றது.

சமீபத்தில் ,கண்டி சித்திலெப்பை மஹாவித்தியாலயத்துக்கு சொந்தமான காணியில், சிங்களப் பாடசாலை ஒன்றை நிறுவி, முஸ்லிம் மஹாவித்தியாலயத்தின் அபிவிருத்தியையும் எழுச்சியையும் தடுப்பதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன இந்த நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்! என்றும் சகோ. அத்ஹம் கண்டனக்குரல் எழுப்பியிருக்கிறார்.

## பொலனறுவ தம்பாளை அல்ஹிலால் மகாவித்தியாலய கட்டடம் இடையில் நிற்கிறது ஏன்?

பொலனறுவை மாவட்டத்தில் அமைந்துள்ள தம்பாளை அல்ஹிலால் மஹாவித்தியாலயத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கல்வி கற்கின்றனர். இந்த மாவட்டத்திலுள்ள ஒரு சில முஸ்லிம் மாஹாவித்தியாலயங்களில் இதுவும் ஒன்று ஆனால், இந்த மஹாவித்தியாலயத்துக்கு தேவையான அடிப்படை கல்வித்தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருவதாக புகார் கூறப்படுகின்றது.

மாணவர்களின் அவசிய இடவசதிக்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டடம் ஒன்று இன்னும் பூர்த்தி செய்யப்படாத நிலையில்அரைகுறையாகவேகாணப்படுகின்றது.

இக்கட்டடத்தை பூர்த்தி செய்து தருமாறு இப்பகு... மக்கள் கல்வி அமைச்சரைக் கேட்கும் முறையீடொன்றை அனுப்பியிருப்பதாக, பொலனறுவை மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர் சகோ. எஸ். எம். ஆதம்லெப்பை முஸ்லிம் காங்கிரஸ் பத்திரிகைக்கு அறிவித்துள்ளார்.

### இருள்!

நேர்மைகளும்
நியாயங்களும்
இங்கே
செத்தபடி......
ஓர் இனம் வாழ
மறுஇனம் மாய்கிறது!
கோஷங்கள் எல்லாம்
வேஷங்களாகி
வெளிச்சத்துக்கு
வர மறுக்கின்றது!
தேச சுதந்திரம்
தேய்ந்துகொண்டிருக்க
தேகங்கள் இங்கே
சாய்ந்து கொண்டிருக்கின்றது

"நவாஸ்"

## சுதந்திரக் கட்சி அமைப்பாளர் முஸ்லிம் காங்கிரஸில் இணைந்தார்

உலகளாவிய இஸ்லாமிய வெகுஜனத் தலைமைத்துவத்தின் உதவிச் செயலாளர் நாயகமாகவும் ஆசியப்பிராந்தியத்தின் பொறுப்பாளராகவும் தெரிவுசெய்யப்பட்ட முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவர் சகோ. எம், எச். எம் அஷ்ரஃப் அவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் வைபவம் சமீபத்தில் திஹாரியில் நடைபெற்றது.

அந்த வைபவத்தின்போது அத்தனகல்ல உடுகொட சுதந்திரக்கட்சி அமைப்பாளர் எம் எஸ். எம் அன்ஸாரி அவர்கள் முஸ், காங்கிரஸில் இணைந்து கொண்டார்.''முஸ்லிம்களின் தனித்துவத்தை, பாதுகாக்க ஒரு முஸ்லிம் கட்சியினால்-முஸ்லிம் காங்கிரஸால் மட்டுமே முடியும்'' என்பதை உணர்ந்த இவரின் மனமாற்றத்தைத் தொடர்ந்து அந்தப் பிரதேசத்தில் மேலும் பாரிய திருப்பம் ஏற்பட்டுவருவதாக தெரிகிறது.

## துறைமுகத்தில் தொழுகை அறை கிடைக்காதா?

கொழும்பு துறைமுகத்தில் பணிபுரியும் முஸ்லிம் ஊழியர்கள், தமது இறை வணக்கத்தை நிறைவேற்றுவதற்கு ஒரு தொழுகை அறையை ஒதுக்கித்தருமாறு அரசாங்கத்தையும், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் ஸ்ரீலங்கா துறைமுக ஊழியர் காங்கிரஸின் சார்பில் அதன் அமைப்பாளர் சகோ. எம். ஏ.எம். காமில் அறூஸ் கேட்டிருந்தார். அதற்கு சம்மதமும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும் இன்னமும் அதற்கான எவ்வித நடவடிக்கைளும் மேற்கொள்ளப்படவில்லை என்று, தெரியவருகின்றது.

## வடகிழக்கில்...

2ம் பக்க தொடர்ச்சி

வெறும் கண்துடைப்பாகவே கருதவேண்டியுள்ளது. சர்வோதயம்,செஞ்சிலுவைச் சங்கம் போன்ற நிறுவனங்கள் செய்யும் உதவிகள் மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியவில்லை!

உண்மையில், மக்களைக் காப்பாற்றும் நோக்கம் அரசுக்கிருக்குமானால் உடனடியாக உணவுத் தேவைகளுக்காகவாவது நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

Lanka Pen Co.
Importers of Ball Point Pens, Refills
Stationery Items &
Household Goods etc.
Phone : 24921
Telex : 21754 FAYAZ CE
Fax : 548636
Att : LANKA PEN CO
44 2nd Cross Street
Colombo-11 Sri Lanka

## தலைவரின் வேண்டுதல்!

அஸ்ஸலாமு அலைக்கும்.

இது சோதனை மிகுந்த காலகட்டம். குறிப்பாக, வடகிழக்கு முஸ்லிம்கள் மிகவும் விழிப்போடும் பொறுமையோடும் நடந்து கொள்ளவேண்டும். நாம், பொரிக்கஞ்சட்டிக்குள் கிடந்து, பாய்ந்து அடுப்புக்குள் விழுந்துவிடக்கூடாது!

எதிர்வருகின்ற எந்த தேர்தலுக்கும் முகம் கொடுக்கவும் அதன்மூலம், நமது ஒற்றுமையை பிரகடனம் செய்து, தனித்துவத்தை பாதுகாக்கவும் திடசங்கற்பம் பூண்டாகவேண்டும்! அ(ல்லாஹ்)திகளுக்காக பிரார்த்திப்போம்! ஆவன அனைத்தும் செய்வோம்!

# முஸ்லிம் காங்கிரஸ்

# கிழக்கை பிரிக்க நினைத்தால் இந்தியா தலையிடக்கூடும்!

1ஆம் பக்கத் தொடர்ச்சி

களை வைத்துக்கொண்டு அழிச்சாட்டியம் புரிந்தது. தமிழ் தேசிய இராணுவத்தினதும், ஏனைய போட்டித் தமிழ்க் குழுக்களினதும் ஆயுதங்களைப் பறித்துக்கொண்டது. ஜனநாயகத்தில் நுழைந்துள்ளதாகச் சொல்லி, ''விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியை'' சாட்டுக்கு உருவாக்கியது. தனது எதிரிகளானஏனைய தமிழர் குழுத் தலைவர்களையும் கொன்றது. முஸ்லிம்களுக்கென்று கட்சி இருக்கக்கூடாது என்று, முஸ்லிம் காங்கிரஸ் மாகாண சபை உறுப்பினர்களையும், தொண்டர்களையும் கொன்றது.

தமிழீழக் கோரிக்கையைக் கைவிடாமல், தமிழ் மொழிப் பிரதேசம் முழுக்க யுத்தத்தை எதிர்பார்த்து பல ஆயிரக் கணக்கான அப்பாவி இளைஞர்களை தம் படையில் கட்டாயப் பணிக்காகச் சேர்த்தது. ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்குமாறு இலங்கை அரசை நிர்ப்பந்தித்தது. வ/கி மாகாண சபையைக் கலைக்குமாறு இலங்கையை வற்புறுத்தியது.

விடுதலைப் புலிகளை எவ்வாறாயினும் ஜனநாயகவழிக்குத் திருப்பவேண்டுமென்ற விடாப்பிடியான நல்லெண்ணத்தில் மாண்புமிகு பிரேமதாசா முஸ்லிம்களின் உயிர்களையும் உடைமைகளையும் பலிகொடுக்கத் தயாரானார். போட்டித் தமிழ்க் குழுக்களின் தலைவர்களையும், தொண்டர்களையும், அப்பாவித் தமிழ் மக்களின் உடைமைகளையும் நிம்மதியையும்

## வடகிழக்கில் நிரந்தர அமைதியையும் தீவிரவாத குழுக்கள் ஒன்றுபடுவதையும் இந்தியா விரும்பவில்லை!

பலிகொடுத்துப்பார்த்தார்.

அதே நேரத்தில், இலங்கையின் முப்படைகளையும் பல்லாயிரக் கணக்கில் அதிகரித்தார். அவற்றின் பலத்தை பன்மடங்கு பெருக்கினார். சர்வதேச மட்டத்தில் கெட்டிருந்த இலங்கையின் பெயரைச் சீர்செய்தார். தான் எவ்வளவு தூரம் விட்டுக் கொடுத்தார் என்பதையும், இன்னும் விட்டுக் கொடுக்கத் தயாராக இருந்தார் என்பதையும் முழு உலகுக்கும் வெளிப்படுத்தி நல்ல பெயர் பெற்றுக்கொண்டார்.

இந்தியாவோடு நல்லுறவை வளர்த்துக்கொள்வதில் ஆர்வம் காட்டினார். விடுதலைப் புலிகளின் அத்துமீறல்களுக்கு இடங்கொடுத்து விடுதலைப் புலிகளின் பெயர் கெட்டுப் போகுமளவில் பொறுத்திருந்தார்.

எதிர்பார்த்தபடி, விடுதலைப் புலிகள் இலங்கைப் பொலிஸைச் சரணடையச் செய்து கொன்றது. இந்தியப் படைக்கு இரண்டு வருடகாலமாக ஈடுகொடுத்து நின்றதன் பெருமையை வளர்த்துக் கொண்டு இலங்கையோடு மோதியது.

விடுதலைப் புலிகளால் பாதிக்கப்பட்ட தமிழ்க் குழுக்களும், விடுதலைப் புலிகளால் வ/கி மாகாண சபை ஆட்சியை இழந்த தமிழ் குழுக்களும விடுதலைப் புலிகளை அழித்தொழிப்பதற்கு இலங்கை இராணுவத்துக்கு நிபந்தனையற்ற உதவியைச் செய்து காட்டிக்கொடுக்க முன்வந்தன.

இன்று நிலைமை கட்டுக்கடங்காது போயுள்ளது. விடுதலைப் புலிகள் எதிர்பாராத வகையில் பெருத்த தோல்விகளையும் அழிவுகளையும் சந்தித்து வருகின்றன. போதாதற்கு, இதுகாலவரை சகல தமிழ் பயங்கரவாதக் குழுக்களாலும் மிக மோசமாக சித்திரவதை செய்யப்பட்டு வந்த முஸ்லிம் சமூகம் தலைநிமிர்ந்துள்ளது. முஸ்லிம் சமூகத் தலைவர்களின் பொறுமைக்கும் சமாதானத்துக்குமான பணிப்புரைகளை மீறி தமது பிரதேசங்களில் பயங்கரவாதத்தை பூண்டோடு ஒழிக்க இலங்கை இராணுவத்தோடு அனுதாபமாக நடந்து கொள்வது தவிர்க்கமுடியாத விஷயம்தான்.

கடந்த பல ஆண்டுகளாக தமிழர் சமூகத்தின் அரசியல் விடிவுக்கான தமிழர்களின் போராட்டம் மிகவும் பரிதாபகரமான முடிவை அடைந்துள்ளது.

தமிழர்களின் பாரம்பரிய வாழிடமெனக் கருதப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணங்களின் இணைப்பு, கேள்விக்குறியாகிவிட்டது.

கிழக்கை, வடக்கிலிருந்து பிரித்து விடுவதற்கான அரசாங்கத்தின் நோக்கத்தையும் வேகத்தையும் தடை செய்ய இனி எந்த தமிழ் குழுவாலும் முடியப்போவதில்லை.

விடுதலைப் புலிகளின் முதுகெலும்பை முறித்துவிடுவதில் இலங்கை, கிழக்கு மாகாணத்தில் வெற்றியடைவது உறுதியாகி வருகிறது.

ஏனைய தமிழ் இயக்கங்கள் இலங்கை அரசாங்கத்தின் காலை நக்கிவரும்நாய்க்குட்டிகளாகிவிட்டன. 'தம்மைக் காப்பாற்றிக் கொள்வதே' அவர்களின் போராட்டங்களில் முதன்மையாகிவிட்டது. அத்தோடு தமிழர் சமூகத்தின் உரிமைகளைப் பற்றி பேசுவதற்குக்கூட ஒழுங்கான தலைமைத்துவம் இல்லாத சமூகமாக தமிழர் சமூகம் மாறிவிட்டது.

இவற்றிற்கெல்லாம் நம்மால் சிந்திக்கக்கூடிய ஒரேயொரு காரணம் தமிழர் சமூகத்தின் ஒற்றுமையீனம்தான். தமிழர் குழுக்கள் அனைத்தும் ஒரு பொது நோக்கத்திலும் வேலைத் திட்டத்திலும் உடனடியாக ஒன்றுபடுமாயின், தமிழர் சமூகத்தைப் பேரழிவிலிருந்து காப்பாற்ற முடியும். ஆனால் தமிழர் குழுக்கள் ஒற்றுமையாகப் போவதில்லை, அவர்களின் கதி இனி அதோகதிதான்!

இந்தக் கசப்பான பாடங்கள் நமக்கு உணர்த்தும் படிப்பினை என்ன? ஆழமாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இன்று நடைபெற்றுவரும் யுத்தங்கள் இரண்டொரு நாட்களில் முடிவடையப் போவதில்லை.

கிழக்கில் பயங்கரவாதம் ஒரு கட்டுப்பாட்டுக்குள் வரலாம். ஆனாலும் கிழக்கின் நிர்வாகத்துக்கு பயங்கரவாதத்தால் காலத்துக்கு காலம் ஏற்படப்போகின்ற அச்சுறுத்தல்களை முற்றாக தவிர்க்க முடியும் என்று, சொல்வதற்கில்லை.

கிழக்கை வடக்கிலிருந்து பிரிக்கும் ஏற்பாடுகளை இலங்கை அரசாங்கம் செய்ய முற்படும் போது இந்தியா தலையிடாமல் இருக்கும் என்று, சொல்வதற்குமில்லை.

எது எவ்வாறாயினும் இன்றுள்ள சூழ் நிலையில் வடகிழக்கு முஸ்லிம்கள் தமது அரசியல் தனித்துவத்தை ஒரே முகமாக உறுதிப்படுத்த வேண்டிய கட்டாயத் தேவை எழுந்துள்ளது. கிழக்கைப் பிரிப்பதற்கான மக்களபிப்பிராய வாக்கெடுப்பின்போதும், கிழக்கு மாகாணத்துக்கென ஒரு மாகாணசபைக்கான தேர்தல்கள் நடக்கும் போதும், வட-கிழக்கில் தேர்தல்களை நடாத்துவதற்கான சூழ்நிலை ஏற்பட்டுத் தேர்தல்கள் நடக்கும்போதும் முஸ்லிம்கள் அனைவரும் ஒருமித்து, ஒரே குரலாக, ஒரே கட்சியின் கீழ் ஒற்றுமைப்பட்டு தமது உரிமைகளை வென்றெடுக்கும் நிலையிலிருந்தே முடிவெடுக்கவேண்டும்.

இது காலவரை நடைபெற்று வந்த முஸ்லிம் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக மாகாண சபைகளிலும், பாராளுமன்றத்திலும் தொடர்ச்சியாக குரல் கொடுத்துவரும் கட்சி முஸ்லிம் காங்கிரஸ் மாத்திரம்தான் என்பது, அனைவரும் அறிந்த விஷயமாகும்.

வடக்கு கிழக்கு இணைந்திருக்கும் பட்சத்தில் வடக்கு கிழக்கிலுள்ள முஸ்லிம்களுக்கென தனியான ஒரு மாகாண

2ம் பக்கம் பார்க்க

## புலிகளுக்கு எங்---

6ஆம் பக்கத் தொடர்ச்சி

எனவேதான் விடுதலைப் புலிகளுக்கு ஆறாவது திருத்தச்சட்டத்தை நீக்கவேண்டுமென்ற அவசியம் இல்லையோ என்று எண்ணவும்தோன்றுகிறது

ஐ. தே. க. அரசாங்கத்தால் கொண்டுவந்த, இந்த ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்கும்பொறுப்பு அந்த ஐ.தே க. அரசாங்கத்துடைய தே. என்று மக்களுக்குச் சொல்லி விட்டு அரசாங்கம் தனது பொறுப்பை நிறைவேற்றத் தவறிவிட்டது.

யுத்தம் தவிர்க்க முடியாததாயிற்று'' என்று, மக்களிடம் யுத்தத்தை நியாயப்படுத்தவே புலிகள், இந்த நாடகம் ஆடுகின்றனர்! எனவே, இன்று யுத்தம் தேவைப்படுவது புலிகளுக்குத்தானா?

வடக்கு-கிழக்கில் முஸ்லிம்களின் பிரதம பேச்சாளரான முஸ்லிம் காங்கிரஸை விடுதலைப்புலிகள் அங்கீகரிக்க மறுப்பதற்கும், ஏனைய தமிழ் ஜனநாயக கட்சிகளோடு அரசாங்கம் பேசுவதை புலிகள் எதிர்ப்பதற்கும் என்ன காரணம்? ''வடக்கு கிழக்கின் ஏக பிரதிநிதியாக தாம் இருக்க முடியாமற் போய்விடும்!'' என்ற, உண்மையினாலல்ல! ''தேர்தல் ஒன்று நடந்தால் 73 பேர் கொண்ட மாகாண சபையில் எளிய பெரும்பான்மையான 37 ஆசனங்களை புலிகள் பெறமுடியாமல் போய்விடும்! என்ற, நிஜமான பீதியினாற்தான்! இருக்க வேண்டும்!

சுதந்திரமானநேர்மையான ஒரு தேர்தல் வடகிழக்கில் நடக்குமானால் புலிகள் தவிர்ந்த ஏனைய தமிழ்.முஸ்லிம்.சிங்கள கட்சிகள் அனைத்தும் சேர்ந்து எளிய பெரும்பான்மையை பெற்றுவிடக்கூடும்'

இதனால்தான், விடுதலைப் புலிகள் ஏனைய கட்சிகளை வடக்கு கிழக்கில் அங்கீரிக்க மறுக்கின்றன. வடகிழக்கு மாகாணசபைத் தேர்தல நடைபெறாது தவிர்ப்பதற்காகத்தான் ஆறாவது திருத்தச் சட்ட நீக்கத்தை நிபந்தனையாக முன்வைத்துள்ளன.

மாண்புமிகு ஜனாதிபதி பிரேமதாசாவின் நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் உறுதிப்படுத்திக் கொண்டு, ஜனநாயக பாரம்பரியத்தையும் மனதார ஏற்று, ஏனைய கட்சிகளையும் கருத்துக்களையும் அங்கீகரித்து, விடுதலைப் புலிகள் நடைமுறையில் காட்டுவார்களானால், இது வரை நடந்த அசம்பாவிதங்களையும்கசப்புகளையும் மன்னித்து மறந்து, ஏனைய கட்சிகளும் விடுதலைப்புலிகளை நம்பத் தொடங்கும். மக்களும் எதிர்கால நன்மைகளுக்காக தம் மனக்கொதிப்புகளைத் தணித்துவிடுதலைப்புலிகளை ஏற்கவும் முன்வருவார்கள்.

வடகிழக்கின் அதிகாரமும் ஆட்சியும்விடுதலைப்புலிகளை வந்தடையும். இவ்வளவுக்கும் புலிகள், ஆயுதங்களை கீழே வைக்கவேண்டிய அவசியமே இல்லை. ஜனநாயகத்தை மக்களின் அபிப்பிராயத்தை பூரணமாக ஏற்றுக்கொள்ளும் பிரதிபலிக்கும் எந்தக்குழுவின் ஆயுதமும் மக்களுக்கு எதிரானதே அல்ல!

அதேவேளை, ஆயுதமும் ஆயுதப்போராட்டமும் ஒரு சமூகத்துக்குமட்டுந்தான் அவசியமானதுமல்ல! விடுதலைக்காக போராடும் எந்தசமூகத்திற்கும் எந்த குழுவிற்கும் அது அவசியமாகின்றது! அரசியல் அதிகாரம் துப்பாக்கி குழல்களிலிருந்துதான் பிறக்கிறது! என்று நினைப்பதற்கு புலிகளுக்கு மாத்திரம் உரிமை கிடையாது.

தமிழர் விடுதலைக்காக போராடும் விடுதலைப் புலிகள், இன்னும் ஆயுதங்களைவைத்துக்கொண்டுதான் பேசுகின்ற காரணத்தால், முஸ்லிம்களும் இனியாவது ஆயுதத்தை வைத்துக்கொண்டுதான்பேச வேண்டும்! என்ற நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்பட்டுவருகின்றார்கள்.

மேற்சொன்ன, நடைமுறைக்கு சாத்தியமான யதார்த்த பூர்வமான அணுகுமுறைகளை மக்களின் நன்மை கருதி செயலில்காட்ட புலிகள் தவறுவார்களேயானால் சாதுமிரண்டது போலவே ஜனாதிபதி பிரேமதாஸா கோலம் கொள்வார். இது ஜேவிபி கற்றுக்கொடுத்த அர்த்தமுள்ள பாடமாகும். ''அப்பாவி மக்கள் அழியப் போகிறார்களே'' என்பதற்காக சிங்கள மக்களின் நியாய பூர்வமான உணர்வுகளை ஜனாதிபதி பிரேமதாஸா மிதித்துவிடப் போவதில்லை. எனவே, விடுதலைப்புலிகள் இனியாவது ஆற அமர யோசித்து செயற்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org